Book 16

புதிய நினைவூட்டல்

மாத இதழ்

உங்களின் செல்வமும், பிள்ளைகளும், உங்களுக்கு சோதனை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் இறைவனிடம் மகத்தான கூலி இருக்கின்றது.

அல் குர்ஆன் - 8 : 28

டிசம்பர்
2000
December

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

எளிய உண்மைகள்

இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 .... 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ...19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ....19X6
   (சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = ...19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = ...19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 .... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் 19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ....19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 .... 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது .... 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ...19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது .... 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 .... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

புதிய நினைவூட்டல்

ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

டிசம்பர் 2000
நினைவு 11

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

இதழின் உள்ளே

★ அல்ஃபாத்திஹா அரபியில் தான் ஓதப்பட வேண்டும். ஏன்?

★ ஹதீஸ்களின் கணித அற்புதம்

★ ஓர் ஆதரபூர்வமான ஹதீஸ்

★ ஹதீஸ்களின் உண்மை நிலை

★ யேசுகிறிஸ்து

★ சோதனை

★ அழுது கொண்டிருக்கும் மனிதர்கள்.....

அல்ஃபாத்திஹா அரபியில் தான் ஓதப்படவேண்டும். ஏன்?

ஆதம் தன் இரட்சகரிடமிருந்து வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டார், அதன் மூலம் இறைவன் அவரை மீட்டார். அவர் மீட்பவர், மிக்க காருண்ய ர் (2:37)

ஆதம் தன்னுடைய மீட்சிக்காக இறைவனிடமிருந்து பெறப்பட்ட சில குறிப்பிட்ட வார்த்தைகளை உச்சரிக்க வேண்டியதாக இருந்தது. அவ்விதமாகவே நாமும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும், மீட்சியை அடையவும் நமக்குச். சில வார்த்தைகளை இறைவன் அளித்திருக்கின்றார். அவை அல்ஃபாத்திஹாவின் வார்த்தைகளே. மேலே விவரிக்கப்பட்ட மகத்தான அற்புதத்தின் மூலமாக அல்ஃபாத்திஹாவின் ஒவ்வொரு எழுத்தும் இறைவனால் வடிவமைக்கப்பட்டதுதான் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

குர்ஆன் முழுவதும் 19 என்ற எண்ணைப் பொதுவாகக் கொண்டு அற்புதமான கணித அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் இப்போது நன்கறிந்திருக் கின்றோம்.

786

இந்த எண் முஸ்லிம்களிடையே மிகவும் பிரபலமானது. இந்த எண் குர்ஆனின் முதல் திருவாசகமான

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

(அளவற்ற அருளும், நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்) என்பதில் உள்ள எழுத்துக்களின் எண் மதிப்பாகும். காகிதங்களில் இறைவனின் பெயரை எழுதிவிட்டுப் பின்னர் அதைக் குப்பையில் எறிய வேண்டிய நிலையைத் தவிர்க்க அவர்கள் 786 என்ற இந்த எண்ணைப் பயன்படுத்தினர். பிஸ்மில்லாவின் இடத்தில் 786 என்ற எண்ணைப் பயன்படுத்துவதன் மூலம் முஸ்லிம்கள் அரபி எழுத்துக்களின்

(அப்ஜத்) எண் மதிப்புக்களில் பரிச்சயம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என இறைவன் நாடியுள்ளார் என்பது இப்போது அறியப்பட்டுள்ள ஓர் விஷயமாக உள்ளது.

மக்காவில் பெரும் சோகம்

மேலே விவரிக்கப்பட்டுள்ள சக்திவாய்ந்த அற்புதம் அல்ஃபாத்திஹா (திறவுகோல்) அத்தியாயத்தின் தனித் தகுதியையும், இறைவனுடன் நாம் அன்றாடம் தொடர்பு கொள்ளும் தொடர்புத் தொழுகையில் இந்த அத்தியாயத்தின் பங்கையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சாத்தான் நாம் நம்முடைய இரட்சகரைத் தொடர்பு கொள்வதை விட்டுத் தடுக்க விரும்புகின்றான். எனவே அவன் திறவுகோலைச் (அல்ஃபாத் திஹாவை) சேதப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டான்.

சாத்தானின் கை வண்ணத்தை மக்காவில் உள்ள புனிதப்பள்ளியான கஃபா உட்பட 'முஸ்லிம்கள்' தொழும் அனைத்துப் பள்ளி வாயில்களிலும் நாம் காணலாம். சீர்கெட்டுப்போன இன்றைய இமாம்களின் பின்னே நாம் தொழுதால் குர்ஆனின் முதல் வாசகமும் மிக முக்கியமான வாசகமுமான பிஸ்மில்லாவை நாம் ஒரு போதும் கேட்க முடியாது. அவர்களுடைய மார்க்க ஆதாரங்களின் படி - நன்கு கவனியுங்கள் - தொழுகையில் பிஸ்மில்லாவை ஓதுவது "மக்ரூஹ்".

பிஸ்மில்லாவின் எண் மதிப்பு 786. ஆமீன் என்ற வார்த்தையின் எண் மதிப்பு 102 பிஸ்மில்லாவை நீக்கி ஆமீன் என்பதைச் சேர்த்ததில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இறுதி விளைவு 102-786 =-684. 684 என்பது 'அல்குர்ஆனின் கரீம்' (கண்ணியமிக்க குர்ஆன்) என்ற வார்த்தையின் எண்மதிப்பு ஆகும். அறம்மதியர்கள் சாவியைத் தொலைத்த விட்டபடியால் அவர்களால் குர்ஆனை, அதன் மெய்யான கருத்துக்களை அடைய முடியவில்லை
என்பதை இது 7-684) நமக்குத் தெரிவிக்கின்றது.

மக்ரூஹ் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன தெரியுமா? "வெறுக்கத்தக்கது உங்களால் நம்ப முடிகின்றதா? இதே அவர்களுடைய ஆதாரம். 'நான்கு மத்ஹப்களின் தீர்ப்புக்கள்' (தார் அல்ஃபிக்ர் - பெய்ரூத்) என்ற ஆங்கிலப் புத்தகத்தின் பக்கம் 257.

மேலும் கூடுதலாக, திறவுகோன அத்தியாயத்தின் இறுதியில் குர்ஆனில் இல்லாத, அரபியும் அல்லாத ஒரு வார்த்தையை மிகவும் சப்தமிட்டு உச்சரிக்கும் படியும் சாத்தான் கட்டளையிடுகிறான் பாரம்பர்ய முஸ்லிம்கள் தொழும்போது திறவுகோல் அத்தியாயத்தின் இறுதியில் "ஆமீன் என்று கத்துவதை கூச்சலிடுவதை நீங்கள் கேட்கலாம். பிஸ்மில்லாவில் உள்ள 19 எழுத்துக்களை நீக்கம் செய்து ஆமீன் என்ற வார்த்தையைக் சேர்த்ததன் மூலம் இம்மக்கள் இறைவனுடன் தொடர்பு கொள்வதைத் தடுத்துத் தன்னுடன் தொடர் கொள்வதை சாத்தான் உறுதி செய்து கொள்கிறான்.

அவர்கள் சாவியைத் தொலைத்து விட்ட னர்.

பிஸ்மில்லாவின் எண் மதிப்பு 786. ஆமீன் என்ற வார்த்தையின் எண் மதிப்பு 102. பிஸ்மில்லாவை நீக்கி ஆமீன் என்பதைச் சேர்த்ததில் து" முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இறுதி தா விளைவு 102-786 = -684. 684 என்பது 'அல்குர்ஆனில் கரீம்' (கண்ணியமிக்க குர்ஆன்) என்ற எற வார்த்தையின் எண்மதிப்பு ஆகும். முஹம்மதியர்கள் சாவியைத் தொலைத்து விட்டபடியால் அவர்களால் குர்ஆனை, அதன் மெய்யான கருத்துக்களை அடைய முடியவில்லை என்பதை இது (-684) பம் நமக்குத் தெரிவிக்கின்றது.

குர்ஆன் இலகுவானது என்று இறைவன் திரும்பத் திரும்பக் கூறியிருப்பினும் இன்றைய முஸ்லிம்களனைவரும்,அரபியர்கள், உட்பட குர்ஆன் புரிந்து கொள்ளக் கடினமானது என்று கூறும் வினோதத்திற்கான காரணத்தை எடுத்துரைக்கிற்னது.

பிஸ்மில்லாவை நீக்கி ஆமீன் என்பதைச் சேர்த்ததன் மூலம் முஹம்மதியர்கள் சாவியைத் தொலைத்து விட்டனர். அதன் விளைவாக அவர்கள் குர்ஆனை அடைய முடியாத, இறைவனுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாத துர்பாக்கிய நிலையில் இருக்கின்றனர். என்ன கி துரதிர்ஷ்டம்!

❋ ❋ ❋

ஹதீஸ்களின் கணித அற்புதம்!!

குர்ஆனில் உள்ள அற்புதக் கணிதக் கட்டமைப்பு வெளிப்படுத்தப் பட்டதிலிருந்து ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகிய பொய்ச் செய்திகளின் ஆதரவாளர்கள் மிகவும் கலக்கமடைந்து இருக்கின்றனர். அவர்கள் ஹதீஸ்களைக் குர்ஆனுக்கு நிகரானவை என்று கூறி வருகின்றனர். அப்படியானால் ஹதீஸ்களில் ஏதாவது கணித அற்புதங்கள் காணப்பட வேண்டும் அல்லவா? அத்தகைய அற்புதம் எதுவும் ஹதீஸ்களில் இல்லை என்று கவலையுடனிருக்கும் ஹதீஸ் ஆதரவாளர்களுக்கு நாம் ஹதீஸ்களில் உள்ள ஒரு கணித அற்புதத்தை எடுத்துக் கூறுவோம்.!

புகழ்பெற்ற ஹதீஸ் தொகுப்புக்களான இமாம் மாலிக் எழுதிய முஅத்தாவிலும் (43/11) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் எழுதிய முஸ்னதிலும் (2/182) நாம் ஒரு கணித அற்புதத்தைக் காண்கிறோம். அதில் ஒரு பெண்மணியின் விரல்கள் வெட்டப்பட்டால் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈடு குறித்து ஒரு தகவல்.

அவளுடைய ஒரு விரல், வெட்டப்பட்டால் 10 ஒட்டகங்கள்

இரு விரல்கள் வெட்டப்பட்டால் 20 ஒட்டகங்கள்

மூன்று விரல்கள் வெட்டப்பட்டால் 30 ஒட்டகங்கள்

ஆனால் நான்கு விரல்கள் வெட்டப்பட்டால் 20 ஒட்டகங்கள் மட்டும் கொடுத்தால் போதும்!

இதுதான் அவர்களுடைய ஷரீஅத் சட்டம்.

அவர்களுடைய கூற்றுப்படியே அவர்கள் சன்னிகள்தான் (சுன்னத் வல்ஜமாத் முஸ்லிம்கள் அல்ல. நான்கு விரல்கள் வெட்டப்பட்டால் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈடு குறைக்கப் பட்டிருப்பது தற்செயலானது அல்ல. இதில்ஏதேனும் 'கணிதஅற்புதங்கள்'

அவளுடைய ஒரு விரல் வெட்டப்பட்டால்
10 ஒட்டகங்கள்
இரு விரல்கள் வெட்டப்பட்டால்
20 ஒட்டகங்கள்
மூன்று விரல்கள் வெட்டப்பட்டால்
30 ஒட்டகங்கள்
ஆனால் நான்கு விரல்கள் வெட்டப்பட்டால்
20 ஒட்டகங்கள்
மட்டும் கொடுத்தால் போதும்!

ஒளிந்திருக்கக் கூடும். ஆனால் ஒன்று! ஒருவன் தவறுதலாக ஒரு பெண்மணியின் மூன்று விரல்களை வெட்டிவிட்டால் அவன் அப்பெண்மணியின் நான்காவது விரலையும் வெட்டிவிட்டானானால் அவன் கொடுக்க வேண்டிய நஷ்டாடு மலிவானதாக குறைவானதாக ஆகிவிடும்!

மற்றுமொரு கேள்வி! சன்னி அறிஞர்கள் ஒரு பெண் மணிக்கு ஐந்து விரல்கள் உள்ளன என்பதை அறிவார்கள் அல்லவா? ஒரு பெண்ணின் ஐந்து விரல்களும் வெட்டப்பட்டால் கொடுக்கப் படவேண்டிய நஷ்ட ஈடு என்ன? நாம் அவர்களுடைய இஜ்திஹாதுக்காக (ஆய்வுக்காக) காத்திருக்கின்றோம்.

(Submission Perspectiva செப்டம்பர் 1989 இதழிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது.)

❋ ❋ ❋ ❋ ❋

ஒரு ஆதாரபூர்வமான ஹதீஸ்!

தீர்ப்பு நாளில் தன்னுடைய எதிரிகள் இட்டுக்கட்டிய (ஹதீஸ், சுன்னத் ஆகிய) பொய்களுக்காக தன்னைப் பின் பற்றியவர்கள் குர்ஆனைப் புறக்கணித்து விட்டனர் என்று முஹம்மத் நபி இறைவனிடம் புகார் கூறுவார்.

தூதர் கூறுவார், "என் இரட்சகரே, என் சமூகத்தார் இந்தக் குர்ஆனைப் புறக்கணித்து விட்டனர்." இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் எதிரிகளாக தீயவர்களை நாம் ஆக்கினோம். வழிகாட்டவும் உதவியாளராகவும் இருக்க உமது இரட்சகர் உமக்குப் போதும் (குர்ஆன் போதும்) (25:31)

25:31 க்கும் 6:114 க்கும் வார்த்தைக்கு வார்த்தை உள்ள ஒற்றுமையைக் கவனியுங்கள். இது தற்செயலானதா?

இவ்விதம், இயேசு தன்னை அவர்கள் இறைவன் என்றும், இறைவனின் மகன் என்றும் கூறி அதீத அன்பு கொண்வர்களிடம் அதிருப்தி அடைவது போல, முஹம்மத் தன்மேல் அளவுக்கு அதிகமான அன்பு காட்டியவர்களிடம் அதிருப்தி அடைவார்.

குர்ஆன் - ஆதாரபூர்வமான ஒரே ஹதீஸ்

இவை இறைவனின் வசனங்கள்; இவற்றை உண்மையுடன் நாம் உமக்கு ஓதிக் காட்டுகிறோம். இறைவனுக்கும், அவருடைய வசனங்களுக்கும் பின்னர் வேறு எந்த ஹதீஸை இவர்கள் ஆதரிக்கின்றனர்? பொய் சொல்லும் பாவிகள் அனைவருக்கும் கேடுதான். அவன் இறைவனின் வசனங்களைக் கேட்கின்றான். பின்னர் அவற்றைக் கேட்காதவன் போல பெருமையுடன் தொடர்ந்து தன் வழியிலேயே செல்கின்றான். இத்தகையோருக்கு நோவினை மிகுந்த தண்டனையை வாக்களியும். நம் வசனங்களில் இருந்து அவன் ஏதேனும் அறிந்து கொண்டால் அவற்றைக் கேலி செய்கின்றான். இவர்கள் இழிவு தரும் தண்டனைக்குள்ளாவார்கள். நரகம் அவர்களுக்கு முன்னால் இருக்கின்றது. அவர்களுடைய

குர்ஆன் மட்டுமே பின்பற்றப்பட வேண்டிய ஒரே ஹதீஸ்.

மற்ற அனைத்து ஹதீஸ்களும் வழிகெடுக்கும் பொய்களும், இறை நிந்தனையும் ஆகும்

சம்பாத்தியங்களோ, இறைவனுக்கு அவர்கள் இணையாக்கிய இணையாளர்களோ அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள். இதுவே நேர்வழியாகும். மேலும் தங்கள் இரட்சகருடைய வசனங்களை நம்பாதவர்கள் இழிவையும் கடும் தண்டனையையும் அடைவார்கள். (45:6-11)

நீங்கள் இறைவனின் வசனங்களை நம்புகிறீர்களா? குர்ஆன் முழுமையானது விவரிக்கப்பட்டது, மிகச் சரியானது (6:19, 38, & 114) என்று நம்புகிறீர்களா அல்லது வேறு மார்க்க ஆதாரங்கள் வைத்திருக்கின்றீர்களா?

குர்ஆன் மட்டுமே பின்பற்றப்பட வேண்டிய ஒரே ஹதீஸ். மற்ற அனைத்து ஹதீஸ்களும் வழிகெடுக்கும் பொய்களும், இறை நிந்தனையுமாகும்.

இறைவன் மிகச் சிறந்த ஹதீஸை அருளியுள்ளார்; முரண்பாடற்ற சீரான ஒரு புத்தகமாக, அது (சுவனம் நரகம் ஆகிய) இரு வழிகளையும் விவரிக்கின்றது. தங்கள் இரட்சகருக்குப் பணிந்தவர்களின் தோல்கள் அவற்றைக் கேட்டால் சிலிர்க்கின்றன.

❋ ❋ ❋

ஹதீஸ்களின் உண்மை நிலை

நீங்கள் இறையச்சமுடையவர்களா? படியுங்கள்! சிந்தியுங்கள்!

பல நூற்றாண்டுகளாக முன்னோர்கள் எதைச் செய்தார்களோ அதை மட்டுமே மார்க்கம் என்று எண்ணிக்கொண்டு சிந்தனையற் றிருந்த தமிழ் முஸ்லிம் சமூகத்தைத் தட்டி எழுப்பி 'முன்னோர்கள் செய்ததெல்லாம் மார்க்க ஆதாரம் - அல்ல குர்ஆனும் ஆதாரபூர்வமான (?!) ஹதீஸ்களும், மட்டுமே மார்க்கம், கண்மூடிப்பின்பற்றுதல் தவறு என்பது போன்ற கருத்துக்களைப் பிரசாரம் செய்து தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஊட்டியதில் "தவ்ஹீது அறிஞர்கள்' என்று தமிழகத்தில் அழைக்கப்படும் அறிஞர்களின் பங்கு மகத்தானது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்த பிரசாரம் மிகவும் நல்ல பலனை அளித்தது. ஏராளமானோர் சிந்திக்கத் துவங்கி முன்னோர்களின் மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழித்து உண்மையான இஸ்லாத்தைப் பின்பற்றுவதில் ஆர்வம் கொண்டனர்.

ஆயினும் சிறிது காலத்திற்குள் சற்றுக் கூட்டம் சேர்ந்தவுடன் ஆளுக்கொரு கூட்டமாகப் பிரித்துக் கொண்டு 'இவைதான் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் மற்றவர்கள் அறியாமல் கூறுகிறார்கள் அல்லது மாற்றிக் கூறுகிறார்கள்' என்று கூறு ஆரம்பிக்கிறார்கள். இத்தகைய பிளவுகள் இரண்டு, மூன்று, நான்கு என்று அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது.

அவர்களைப் பின்பற்றுவோருக்கு யார் கூறுவது சரி என்று சரிபார்த்துக் கொள்ள' ஹதீஸ் லைப்ரரிகள்' இல்லாததால் ஒவ்வொருவரும் தன்னைக் கவர்ந்த அறிஞர் கூறுவதே சரியாக இருக்கும் என்றோ அல்லது தன் மனோ இச்சைக்குப் பிடித்தவற்றைக் கூறுபவரிடமோ

நபி இறந்த பின் சுமார் 200 வருடங்கள் கழித்து ஹதீஸ்களின் ஆசிரியரான புகாரியின் வாழ்வில் ஒரு நாள்

Cartoon by Brother Othman Bin Ali, Malaysiu

ஆனால் அவர்களில் பெரும்பாலோர் யூகங்களையேயன்றி பின்பற்றவில்லை மேலும் யூகங்கள், உண்மைக்கு மாற்றாக இருக்க இயலாது. நிச்சயமாக இறைவன் அவர்கள் செய்பவற்றையெல்லாம் முற்றிலும் அறிந்தவராக இருக்கிறார். 10:36

மார்க்கத்தை மீண்டும் ஒப்படைத்து அவரைக் கண்மூடிப் பின்பற்ற ஆரம்பித்து விட்டனர். பழமைவாதிகளோ எப்படியும் கண்மூடிப் பின்பற்றும் தேவை இருக்கின்றது, எனவே புதிய அறிஞர்களைப் பின்பற்றுவதை விடப் பழைய அறிஞர்களைப் பின்பற்றுவதே பாதுகாப்பானது என்று முடிவெடுத்து பழமையிலேயே தங்கி விட்டனர். இதன் விளைவாக முதலில் ஏற்பட்ட விழிப்புணர்வு மறைந்து, தமிழ் முஸ்லிம்கள் மீண்டும் தூங்க ஆரம்பித்து விட்டனர்.

இருப்பினும் சிறு சிறு கூட்டங்களைச் சேர்த்து விட்ட ஒவ்வொருவரும் தங்கள் கூட்டத்தைக் தக்க வைத்துக் கொள்ள ஹதீஸ் வாதப்பிரதி வாதங்கள் செய்ய ஆரம்பித்தனர். சுற்றலில் விட்டுச் சிக்கலில் ஆழ்த்தி, உணர்வுகளைத் தூண்டி வாய்ஜாலங்கள் காட்டி அவர்கள் செய்த வாதப் பிரதிவாதங்களை யாரும் உன்னிப்பாகக் கவனித்தாற் போல் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் அவற்றைக் கவனிக்காதிருந்தால் ஹதீஸ்களின் உண்மைநிலையை அறிந்து அவற்றைப் புறக்கணித்துக் குர்ஆனை மட்டும் பற்றிப் பிடித்திருப்பார்கள்.

1992 ஜனவரி “அல்ஜன்னத்” இதழில் அத்தகையதொரு வாதப்பிரதிவாதத்தை நாம் காண நேர்ந்தது. அது நம்முள் பல சிந்தனைகளை எழுப்பியது. அவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். இங்கே அவர்களுடைய வாதப்பிரதி வாதங்களை அப்படியே கீழே தந்திருக்கின்றோம்.

அவர்களுடைய வாதங்களும் பிரதிவாதங்களும் புரிந்து கொள்ளக் கடினமாயிருப்பினும், அவற்றைச் சற்றுக் கவனித்துப் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். நாம் அவற்றைப் புரிந்து கொள்ளக் கூடாது என்ற அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றாமல் புரிந்துகொள்ள முயற்சித்தால் அவர்களுடைய வாதங்கள் நிச்சயம் நமக்குப் புரியும், அத்துடன் ஹதீஸ்கள் எவ்வளவு கோளாறுகள் நிறைந்தவை என்றும் நமக்குப் புரிந்து விடும்.

அல்ஜன்னத் : இமாம் சப்தமிட்டு ஓதும் ரக்அத்களில்

(பகுதிகள்) மஃமூம்கள் (பின்பற்றித் தொழுபவர்கள்) சூரத்துல் ஃபாத்திஹா உட்பட எதையும் ஓதலாகாது என்பதை சான்றுகளுடன் ஜூலை 91 இதழில் நாம் வெளியிட்டோம். **(ஆறு மாதத்திற்கு முன்னர் ஆரம்பித்த விவாதம் இது. இல்லையா? சரி மேலே படிப்போம்)**

மாற்றுக் கருத்துடைவர்கள் **(அதாவது இவர்களிடம் இருந்து பிரிந்து விட்ட மற்றொரு ஹதீஸ் கூட்டம் மற்றொரு இதழில்)** ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் ஆகிய இதழ்களில் அவற்றை மறுத்துப் பலவாதங்களை முன் வைத்துள்ளனர்.

புதிய நினைவூட்டல் : (இப்படி மாதக் கணக்கில் இவர்கள் இழுத்து அடித்துக் கொண்டிருக்கும் இப்பிரச்சனைக்குக் குர்ஆனில் தாவில்லையா என்னதாஅன் ஓதப்பட்டால் அவற்றை நீங்கள் செவி சாய்த்துக் கேளுங்கள்' (குர்ஆன் - ஃபாத்திஹா என்ற வசனத்தின் படி தொழவைப்பவர் ஓதும் போது பின்பற்றுபவர்கள் வேண்டயதில்லை. செவிசாய்த்துக் கேட்டால் போதும் என்ற அகிய தீர்ப்பைக் குர்ஆன் வழங்கி உள்ளது. இவர்கள் தான் இறைவனின் வார்த்தைகளைப் புறக்கணித்துப் பின்னுக்குத் தள்ளி விட்டார்களே எனவே இவர்கள் தொடர்ந்து தர்க்கித்துக் கொண்டிருப்பதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை . மேலும் கவனியங்கள்)

ஆகஸ்ட் இதழில் அவர்கள் வெளியிட்ட மறுப்பையே சில இதழ்களாக நாம் அலசி வருகின்றோம்.

புதிய நினைவூட்டல்: (அவர்கள் ஒரு இதழில் வெளியிட்ட மறுப்புக் களுக்குப் பதில் வாதங்களே 'சில இதழ்கள் என்றால் முழுமையான பதிலுக்கு - மன்னிக்கவும். பதிலை முடிப்பதற்கு பல மாதங்கள் ஆகும் வாசகர்கள் விஷயத்தை மறந்து விடும்படிச் செய்யும் இது ஒரு நல்ல டெக்னிக்!) ஒரு இதழின் எல்லாப் பக்கங்களையும் இப்பிரச் சினைக்காக ஒதுக்க முடியாது என்பதே இதன் காரணம்.

புதியநினைவூட்டல்:(ஒதுக்கினாலும் விஷயம் முடியாது என்பது மற்றொரு காரணம்) இனி விஷயத்துக்கு வருவோம் **(நம் வாசகர்கள் ஆயாசப்பட வேண்டாம். இதோ விஷயத்திற்கு வந்து விட்டார்கள்)**

நமது கூற்றுக்குச் சான்றாகப் பின்வரும் ஹதீஸையும் நாம் எடுத்துக் காட்டியிருந்தோம்.

நபி அவர்கள் சப்தமிட்டு ஓதித் தொழுத ஒரு தொழுகையை முடித்த பின் சற்றுமுன் எவரேனும் என்னுடன் ஓதினீர்களா? என்று கேட்டனர். அதற்கு ஒரு மனிதர் 'ஆம்' என்றார். அதைக் கேட்ட நபி அவர்கள் 'நான் ஓதுவதற்கு இது இடையூறாக இருக்கின்றது என்று கூறிக் கொண்டிருக்கின்றேன்' {பிறகு ஏன் ஓதுகிறீர்கள்} என்று கேட்டார்கள். அதன்பின் நபி அவர்கள் சப்தமிட்டு ஓதும் ரக்அத்களில் தாங்கள் ஓதுவதை நபித்தோழர்கள் விட்டு விட்டனர்.

இந்த ஹதீஸை வெளியிட்டு நம் வாதத்தை முன் வைத்திருந்தோம். அடிக்கோடிடப்பட்ட வாசகங்கள் அபூஹுரைரா கூறியதல்ல, ஸுஹ்ரி என்பவரால் திணிக்கப்பட்டதே என மாற்றுக் கருத்துடையவர்கள் கூறியதையும் மறுத்திருந்தோம். இது அபூஹீரைராவின் கூற்று அல்ல என்பதற்கு மேலும் சில சான்றுகளை அவர்கள் முன் வைத்துள்ளனர்.

புதிய நினைவூட்டல் - மறுப்பு, மறுப்புக்கு மறுப்பு, மறுப்புக்கு மறுப்புக்கு மறுப்பு என்று தொடர்ந்து கொண்டு வருவதைக் கவனிக்கவும் அவர்களது. மறுட்டை வரிசையாகத் தருகிறோம்.

அவர்கள் ஹதீஸை மொழி பெயர்த்த போது, பிறகு ஏன் ஓதுகிறீர்கள் என்ற வார்த்தையை அவர்களாக அதிகப்படுத்தியுள்ளனர். அடைப்புக்குறிகள் உள்ளது மூலத்தில் உள்ளது அல்ல என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

புதிய நினைவூட்டல் : முஸ்லிம்களே அறிந்து கொள்ளுங்கள் குர்ஆனின் மொழிபெயர்ப்பில் இவர்கள் அடைப்புக்குறிகளுக்குள் எழுதி இருப்பவை மலத்தில் உள்ளது. அல்ல. இவாகளுடைய கைவரிசைதான என்பதற்கான அவர்களின் ஓட்டதல் வாக்கு மூலமே இது. அவையும் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்றெண்ணி ஏமாந்து போகாதீர்கள். மேலும் தொடர்ந்து அவர்களுடைய அடைப்புக்குறி விளையாட்டைக் கவனியங்கள்) விளங்குவதற்காக (மொழி பெயர்ப்பாளரால் சேர்க்கப் பட்டது என்று இதற்கு முன்னர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். மாற்றுக் கருத்துடையவர்களும் இந்த

மரபைப் பின்பற்றி வருகிறார்கள் என்பதற்கு அந்த இதழிலிருந்தே உதாரணம் தரலாம்.

புதிய நினைவூட்டல் : (ஏமாற்றுவதை மரபு என்கிறார்கள் மிகவும் நல்ல மரபு)

அடைப்புக்குறிக்குள் நாம் அந்த வாசகத்தை இடம்பெறச் செய்த பின்னரும் ஹதீஸில் இல்லாததை நாம் ஹதீஸில் சேர்த்தது போல் காட்டுகிறார்கள் என்றால் இதைப்பற்றி என்ன சொல்ல?

புதிய நினைவூட்டல்: (இதைப் பற்றி நாம் ஒன்று சொல்லலாம். இரு தரப்பினரும் ஒன்றாக இருந்து பிரிந்தவர்கள். ஒருவரை ஒருவர் நன்கறிந்தவர்கள். அவர்களில் ஒரு தரப்பினரைப் பற்றி மற்றவர் குற்றம் சாட்டுகிறார் என்றால்? இங்கே இரு தரப்பினரின் குற்றச்சாட்டும் உண்மையாக இருக்கும் வாய்ப்பு உள்ளது அல்லவா?)

நீங்கள் ஓதுவது எனக்கு இடையூறாக உள்ளது என்றால் அதன் கருத்து என்ன? ஏன் ஓதுகிறீர்கள் என்பது தானே. அதைத்தான் நாம் அடைப்புக்குறிக்குள் இடம்பெறச் செய்தோம்.

புதிய நினைவூட்டல் : (ஏன் மனதிற்குள் ஓதிக் கொள்ளுங்கள் என்பதாக இருக்கக் கூடாதா? இவர்கள்தான் ஹலால் ஹராமை விதிக்கும் உரிமை நபிக்கு உண்டு என்று கூறுகிறார்களே, ஏன் நபி நேரடியாக அதைத் தடுக்க வில்லை ? ஒரு ஆலோசனை மாதிரி என் பேச வேண்டும். நடுநிலையாளர்கள் நன்கு சிந்திக்க வேண்டும்.)

எடுத்துக் கொண்ட பிரச்சனைக்கு இது சம்பந்தமில்லா விட்டாலும் ஹதீஸில் கைவரிசையைக் காட்டுபவர்கள் என்று நம்மைப் பற்றிச் செய்த தப்புப் பிரசாரத்திற்கு பதில் சொல்லும் கடமை நமக்கு இருக்கினறது.

புதியநினைவூட்டல்: (இவர்களுடைய அடைப்புக்குறிக் கைவரிசைகள் குர்ஆனில் மட்டுமல்ல ஹதீஸ்களிலும் செய்யப்படுகின்றது.)

இனி அடுத்த விஷயத்திற்கு வருவோம். மேற்கண்ட கூற்று அ பூ ஹீ ரை ரா வு டை ய த ல் ல, ஜீஹ்ரியுடையதுதான் என்பதற்கு மாற்றக் கருத்தடையோர் பின்வரும் சான்றுகளைத் தருகிறார்கள்.

அல்ஜன்னத்தின் எதிரணியினரின் வாதங்கள் :

1. நிச்சயமாக ஜீஹ்ரி தனது வார்த்தைகளை ஹதீஸீடன் கலந்து விடக் கூடியவராக இருந்தார். இதன் காரணமாகவே அவரிடத்திலிருந்து அறிவிப்பைப் பெற்று அறிவிக்கும் 'மூஸா பின் உக்பா' என்பவர் உனது வார்த்தைகளை நீக்கி விட்டு ஹதீஸை மட்டும் பிரித்துக் கூறுவீராக எனக் கூறக் கூடியவராக இருந்தார்.

புதிய நினைவூட்டல் : (இவரே அவரிடம் இருந்து தான் ஹதீஸைப் பெறுகிறார். இந்நிலையில் அவர் தன் வார்த்தைகளை ஹதீஸிலிருந்து பிரித்தாரா இல்லையா என்பதை இவர் எப்படி அறிவார்)

2. இமாம் புகாரி அவர்கள் ஜீஸ்புல் கிராத் பக்கம் 13ல் அக்கூற்றை உபதேசமாக ஏற்று முஸ்லிம்கள் ஓதுவதை நிறுத்தி விட்டனர் என ஜீஹரி கூற அதைக் கேட்ட'ரபீஆ' நீர் ஹதீஸை அறிவித்தால் நபி அவர்களின் கூற்றிலிருந்து உன் கூற்றைத் தனியாக்கி விடு என்றார்

புதிய நினைவூட்டல் : (இந்த ஜீஹரி மிகவும் தீயவர் போல் தெரிகின்றார் அல்லவா? பின்னே. நபியின் வார்த்தைக கடன் வார்த்தைகளைக் கலப்பது லேசான குற்றமா என்ன?)

3. ஜனங்கள் ஓதுவதை விட்டு விட்டனர் எனும் கூற்று ஜீஹ்ரியின் கூற்றே என ஜீஹரியின் கூற்றுக்களைச் சேகரித்து எழுதும் முஹம்மத் பின்யஹ்யா என்பவரும் புகாரியும் அபூதாவூதும் கூறியுள்ளனர்.

புதிய நினைவூட்டல் : (ஓ ! புகாரி பெரிய இமாம். அபூதாவூதும் அவ்வாறே அறுவரில் ஒருவர். இவர்களே கூறிவிட்டார்களா என்ன? பிறகு இவர்களுக்கு இன்னும் என்ன சந்தேகம்? வாதத்தை முடித்து விட வேண்டயது தானே.)

மஃமத் அறிவித்ததாக இப்னு உயைனாவின் அறிவிப்பு அது ஜீஹரியின் கூற்றுத்தான் எனச் சொல்லிக் கொண்டிருக்கிறது. லைஸ்பின் ஸஅது என்பவர் இப்னு ஜீரைஜீடன் ஸீஹரியின் அறிவிப்பை 'நான் குர்ஆன் ஓதும் போது இடையூறாக உள்ளது' என்பது வரை அறிவித்து நிறைவு செய்கிறார்.

புதிய நினைவூட்டல் (மஃமா யார் ? இதனு உயைனா யார் ? லைஸ் யார் ? இப்னு ஜீரைஜ் யார்? யார் அறிவார்?

இவர்களைப் பற்றி என்னவெல்லாம் எழுதப்பட்டு உள்ளதோ. யார் கண்டார். சும்மாவா, ஆறுலட்சம் நபர்களைப் பற்றிய சரித்திரங்கள், பல்வேறு கருத்துக்கள் - எப்படி இவர்கள் ஒரு முடிவுக்கு வருவார்கள்? முடிவில்லாத் தாக்கம் தான்!).

5. ஜனங்கள் ஒதுவதை விட்டுவிட்டனர் என்ற கூற்று ஜீஹ்ரியால் திணிக்கப்பட்டதாகும். **புதிய நினைவூட்டல் : (அதாவது அறிவிப்பாளர் தன் கருத்தையும் நபியின் வார்த்தைகளுடன் திணிக்கும் வாய்ப்பு இருந்திருக்கின்றது)** என தக்தீப் தெளிவு செய்துள்ளார். புகாரி இமாம் அவர்கள் **புதிய நினைவூட்டல்: (இதோ இதற்கு மறுபடியும் இமாம் புகாரியின் ஆதாரம்)** தாரிக் என்ற நூலில் இதற்கு ஓத்தக் கருத்துக் கூறியுள்ளார். இன்னும் அபூதாவுது **புதிய நினைவூட்டல்: (இவரும் இங்கே இரண்டாம் முறை)**

6. ஜனங்கள் ஓதுவதை விட்டு விட்டனர் என்ற கூற்றை அபூஹீரைரா கூறியதாக இப்னு மாலிக் கூறுகிறார்
புதிய நினைவூட்டல் : (இது அவர்களுக்கே எதிரான ஆதாரமாக உள்ளதே இதை அவர்கள் ஏன் தங்களுடைய ஆதாரங்களுடன் சேர்த்துக் கொண்டனர்?) எனக் கூறிவிட்டு அக்கூற்று ஜீஹரியின் கூற்றே என மீரக் என்பவர் எடுத்தெழுதி விட்டு இவ்வாறு தான் புகாரி, தஹலீ, இப்னு பாரிஸ், அபூதாவூது **புதிய நினைவூட்டல்: (இங்கே அபூதாவூதும் புகாரியும் மூன்றாம் முறையாக அல்ஜன்னத்தின் எதிர்த் தரப்பினரின் ஆதாரங் களாகின்றனர்)** இப்னு ஹிப்பான், கத்தாபி ஆகியோரும் இன்னும் இவர்களல்லாத பலரும் கூறுகின்றனர். **புதிய நினைவூட்டல்: (இவர்களுடைய இத்தனை வலு வோன ஆதரங்களை அவர்கள் எப்படி மறுக்க முடியம் என்ற வியப்பு மேலிடுகிறது அல்லவா பாருங்கள் வேடிக்கையை)**

மாற்றுக் கருத்துடையவர்களின் இந்த வாதம் சரியானது தானா என்பதை இனி அலசுவோம்.

புதிய நினைவூட்டல் : (என்ன செய்வது விடயம் அலசலாக இருந்தால் அலசித்தானே ஆக வேண்டும் ஜீஹரி அவர்கள் பற்றிய இந்த விமர்சனத்திற்கு விளக்கம் அளிக்கும் முன் அவரைப் பற்றிய மற்றும் சில விமர்சனங்களைக்

புதிய நினைவூட்டல் : (இவர்களிடம் ஒரு லிஸ்ட் உள்ளது போலும்)

அல்ஜன்னத்தின் ஆதாரங்கள்

ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் அவரைப் பற்றித் தஹ்தீபில் விமர்சிக்கத் துவங்கும் போது குறிப்பிடத்தக்க இமாம்களில் ஒருவர் என்று துவங்குகிறார்கள்.

புதியநினைவூட்டல் : (அப்படியானால் ஜீஹ்ரி - ஹத்ஸில் தனது போரத்தைகளைத் திணிக்கக் கூடியவர் என்ற அவர்களின் விமர்சனம் பொய்யா? இவர்கள் கூறும் இந்த விமர்சனம் பொய்யில்லை என்பதை எப்படி முடிவு செய்வது) மேலும் பலரது விமர்சனங்களையும் அவர் கூறுகிறார்.

அனைத்துத் துறையிலும் திறமை பெற்ற வல்லுநராகவும், அதிக அளவு ஹதீஸ்களை அறிவிப்பவராகவும் அவர் இருந்தார் என்று இப்னு ஸஃது கூறுகிறார்.

நாங்கள் ஹலால் ஹராம் மட்டும் எழுதிக் கொள்வோம். ஜீஹ்ரி கேட்டவற்றையெல்லாம் எழுதிக் கொள்வார். அவர்பால் தேவையாகும் நிலை ஏற்பட்டபோது மக்களில் அவரே சிறந்த அறிஞர் என விளங்கிக் கொண்டேன் என்று அபுஸ்ஸினா கூறுகிறார்.

நபி அவர்களிடம் இருந்து நாம் அறிவிக்கும் அறிவிப்பாளர் வரிசைகளில் சிறந்தவை நான்கு ; என்று இமாம் நஸயீ கூறி அந்நான்கையும்குறிப்பிடுகிறார்கள். அவற்றில் இரண்டு ஜீஹரியின் வழியாக அறிவிக்கப்படுபவை.

ஹதீஸைத் தெளிவாகக் கூறக் கூடியவர்களில் ஜீஹ்ரியைப் போல் எவரையும் நான் கண்டதில்லை என்று அம்ரு இப்னு தீனார் குறிப்பிடுகிறார்.

ஹஸன் பஸரீ,அவரை ஒத்தவர்கள் உயிருடன் வாழும் காலத்தில் ஸீஹ்ரியை விட நபி வழியை அறிந்தவர் எவருமில்லை என்று உமர் இப்னு அப்துல் அஸீஸ் கூறுகிறார் .

புதிய நினைவூட்டல் : (இவர்தான் தன்னிடமிருந்து குர்ஆனைத் தவிர வேறு எதையும் எழுதிக் கொள்ள வேண்டாம் என்ற பியின் கட்டளையை நாற்பெரும் இமாம்களின் வழிகாட்டலையும் மீறி ஹதீஸ்களைப் பதிவு செய்ய முதன் முதலில் அரசு அங்கீகாரம் தந்தவர்.

ஹ்ரியை விட நபிவழியை அறிந்தவர் இப்போது பூமியில் இல்லை என்று மக்ஹூல் கூறுகிறார்.

புதிய நினைவூட்டல் : (இவர் ஹரியின் ரசிகர் போலிருக்கிறது. பூமியில் இல்லையென்றால் எப்படி பூமியில் உள்ள அனைவரின் அறிவின் அளவும் இவருக்கு எப்படித் தெரிந்தது?)

அவரை விட அறிஞரையும் பல்துறை ஞானமுள்ளவரையும் நான் கண்டதில்லை என்று லைஸ் கூறுகிறார்?

புதிய நினைவட்டல் : (இதே லைஸ் என்ற பெயர் அவர்களுடைய ஆதார ப்பட்டியலிலும் வருகிறதே அது எப்படி?)

ஜீஹ்ரியை விட அறிஞரை நாம் கண்டதில்லை என்று அய்யூப் என்பார் கூறிய போது 'ஹஸன் பஸரியை விடவுமா? என்று கேட்டேன், அதற்கவர்கள் ஜீஹரியை விட அறிஞரை நான் கண்டதில்லை என்று மீண்டும் கூறினார்.

புதிய நினைவூட்டல் : (இதைக் கூறுவது யார் என்பதை இவர்கள் குறிப்பிடவில்லை . தவிரவும் இதற்கு ஹஸன் பலரியின் ரசிகர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய நாம் வேறு புத்தகங்களுக்குச் செல்ல வேண்டும். இறைவனையன்றி வேறு பாதுகாவலர்களை எடுத்துக் கொள்பவர்களுக்கு காதனையன்றி வேறு மார்க்க ஆதாரங்களை எடுத்துக் கோள்கயாகார்க்கு உதாரணமாக சிலந்திப் பூச்சியின் வீட்டை அதாவது சிலந்தி - வலையை - இறைவன் கூறுகிறார் பாருங்களேன். எத்தனை சிக்கலான சிலந்தி வலை?)

ஹிஷாம் இப்னு அப்துல் மலிக் என்பார் தன் மகனுக்காக ஹதீஸ் நூலை எழுதச் செய்யுமாறு ஜீஹ்ரியைக் கேட்டுக் கொண்டார். ஜீஹ்ரி அவர்கள் 400 ஹதீஸ்களை (மனப்பாடமாக) கூறினார். அதை ஒரு எழுத்தர் எழுதிக் கொண்டார். பிறகு ஹிஷாம் மீண்டும் ஜீஹ்ரியை அழைத்து 'முதலில் எழுதியது தவறிவிட்டது, மீண்டும் அந்த ஹதீஸ்களைக் கூறுங்கள் என்றார் {உண்மையில் அது தவறவில்லை ஜீஹ்ரியைச் சோதிக்கவே இவ்வாறு கேட்டார்}

புதிய நினைவூட்டல் : (அதாவது இவருக்கு ஹரியின் மேல் சந்தேகம் எனவே பொய் ஒன்றைக் கூறி அவரை இவர் சோதிக்கிறார். அவ்வாறு

அவரைச் சோதிக்க இவர் யார்?)

மீண்டும் ஜீஹ்ரி அந்த ஹதீஸ்களைக் கூறலானார். முன்னர் எழுதியதுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது ஒரு வார்த்தை கூட விடுபடவில்லை என்று ஸயீத் இப்னு அப்துல் அஸீஸ் கூறுகிறார்.

புதிய நினைவூட்டல் : (இதனால் மட்டும் அவர் கூறியதேல்லாம் உண்மை என்றாகி விடுமா என்ன தவிர இது சாத்தியம்தானா என்ற சந்கேமும் நமக்கு உண்டாகிறது அல்லவா?)

இவையாவும் ஜீஹ்ரி பற்றி தஹ்தீபில் கூறப்படும் விமர்சனத் தொகுப்பு

புதிய நினைவூட்டல் : (அதாவது இவை அனைத்தும் ஒரே ஒருவர் எழுதிய புத்தகத்தில் உள்ளவை மட்டுமே. அவர்கள் தந்தவையோ வேவேறு ஆதாரங்கள் இத்துடன் இவர்களுடைய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப் பட்டு பிரதிவாதத்தைத் துவங்க உள்ளனர். கவனமாகப் படிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்)

அல்ஜன்னத்தின் பிரதிவாதம் :

ஜீஹ்ரி அவர்கள் வழியாக இமாம் புகாரி அவர்கள் தமது ஸஹீஹில் புகாரியில் சில ஹதீஸ்களை பதிவு செய்துள்ளனர்

புதிய நினைவூட்டல் : (இவரும் பகாரிடை ஆதாரத்திற்கு அழைப்பதைக் கவனிக்கவும்.)

ஜீஹ்ரி அவர்களின் திறமையிலோ அவரது நினைவாற்றலிலோ, அவரது நம்பகத்தன்மையிலோ எந்தக் குறையும் கிடையாது, என்பதை இந்த விமர்சனங்கள் கூறுகின்றன. அவர் பொய்யராக இருந்திருந்தால் அவர் வழியாக எந்த ஒரு ஹதீஸ்களை பதிவு செய்திருக்க மாட்டார்கள்.

புதிய நினைவூட்டல் : (புகாரியே ஒரு பெரும் பொய்யர் என்தை இப்போது நாம் ஆதாரங்களுடன் அறிந்திருக்கின்றோம்.)

இந்த விமர்சனங்களையும் அவர்கள் எடுத்துக் காட்டிய விமர்சனங்களையும் இணைத்தே அவர் பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும்.

புதிய நினைவூட்டல் : (ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த

விமர்சனங்களை நாம் எப்படி இணைக்க முடியும்? அந்த வித்தையைக் கவனியுங்கள்)

ஹதீஸில் அடைப்புக் குறிக்குள் நாம் குறிப்பிட்ட வாசகம் பற்றியே மாற்றுக் கருத்துடையவர்கள் நம்மை விமர்சனம் செய்கிறார்கள் என்றால் ஹதீஸில் சொந்த வார்த்தைகளைக் கலப்பது எவ்வளவு பெரிய குற்றம்? அப்படி ஒருவர் செய்தால் மேற்கண்ட புகழுரைகளுக்குத் தகுதியுடையவராக இருக்க முடியுமா?

புதிய நினைவூட்டல் : (அவர்கள் வைத்த ஆதாரங்கள் எல்லாம் பொய் என்று இவர்களால் கூற முடியாது, எனெனில் இவர்களின் ஆதாரங்களும் அத்தகையவையே பின்னர் என்ன செய்யப் போகிறார்கள் எட்ட அவவாத்ததை முறியடிக்கப் போகிறார்கள் என்ற வியப்பு மேலிடுகிறதல்லவா?

ஜீஹ்ரி அவர்கள் ஹதீஸ்களை அறிவித்து விட்டு அதற்கு விளக்கமும் கூறச் கூடியவராக இருந்தார். அவ்வாறு விளக்கமாகக் கூறியதை அவரிடம் கேட்டவர்கள் ஹதீஸீடன் கலந்து விடுவர்

புதிய நினைவூட்டல் : (குர்ஆன் விளக்கமானது. விவரிக்கப்பட்டது அதற்கு விளக்கம்தான் ஹதீஸ்கள் என்றால் ஹதீஸ்களுக்கும். ஏன் விளக்கம் தேவைப்படுகிறது? ஜீஹரியின் விளக்கம். அவரிடம் கேட்டவரின் விளக்கம். இன்று இவர்கள் கூறும் விளக்கம், இதற்கெல்லாம் அவசியம் என்ன? இதுதான் நிலைமை என்ற பிறகும் குர்ஆன் மட்டும் போதாதா?)

இப்படி இருந்தால்தான் ஜீஹ்ரி பற்றிய புகழுரைகள் மெய்யாக முடியும்.

புதிய நினைவூட்டல் : (ஓஹோ! அப்படியென்றால் ஜீஹரி ஹதீஸ்களில் தன் வார்த்தைகளைத் திணித்தார் என்பது பொய்யாகி விடுமே தவிர ஐஹரியின் காற்றுக்களனைத்தும் உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இவர்களுக்கு என்ன?)

ஜீஹ்ரியால் சொந்தமாக அளிக்கப்பட்ட விளக்கம் என்று முடிவு செய்ய அவர்கள் வைத்திருந்த அளவுகோல் என்னவென்றால், ஒரு ஹதீஸை ஜீஹ்ரியும் இன்னொருவரும் அறிவிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இன்னொருவர் ஹதீஸில் இல்லாத வாசகம் ஜீஹ்ரி

அறிவிக்கும் ஹதீஸில் மட்டும் காணப்பட்டால் அது அவரது சொந்த விளக்கமாக இருக்குமோ என்ற அடிப்படையில் அவ்வாறு முடிவு செய்வார்கள். இதுதான் ஹதீஸிலிருந்து ஜீஹ்ரியின் கூற்றைத் தரம் பிரிக்க அவர்கள் கையாண்ட முறை.

புதிய நினைவூட்டல் : (இது சிலந்தி வலையின் மற்றோரு சுற்று. இச்சுற்று முடிந்தவுடன் இதையொட்டி அடுத்தது)

மேற்கூறிய ஹதீஸ் விஷயத்திலும் இந்த அடிப்படையிலேயே மேற்கண்ட விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. "நபி அவர்கள் இவ்வாறு கூறியதும் நபி சப்தமிட்டு ஓதும் ரக் அத்களில் நபித்தோழர்கள் ஓதவில்லை என்ற வாசகம் மற்றவர்களின் அறிவிப்பில் மட்டும் காணப்படுகிறது. அதனால் அது ஜீஹரியின் விளக்கமாகவே இருக்க வேண்டும் என்பது அவர்கள் முடிவு.

புதிய நினைவூட்டல் : (அவர்களுடைய மேற்குறிப்பிட்ட வாதம் புரியவில்லை அல்லவா முன்னுக்குப் பின் முரணாக உள்ளது அல்லவா முன்னர் மற்றவர்களின் அறிவிப்பில் காணப்படாத வாசகம் ஜீஹரி கூறியதில் இருந்தால் அது ஹரியின் விளக்கம் என்று முடிவு செய்வதாகக் கூறப்பட்டது. இப்போது அதே மேற்கண்ட வாசகம் மற்றவர்களின் அறிவிப்பில் மட்டும் காணப்படுவதால் அது ஜீஹரியின் விளக்கமாகவே இருக்க வேண்டும் என்பது அவர்கள் முடிவு என்று கூறப்படுகிறது. தவறு நடந்திருப்பது பரிகிறதல்லவோ தவறு என்ன வென்றால அவாகளடையவாதத்தின் ஒரு வாசகம் விடுபட்டுள்ளது. அதாவது மேற்கண்ட வாக்கம் மற்றவர்களின் அறிவிப்பில் காணப்படவில்ல, ஹரியின் அறிவிப்பில் மட்டும் காணப்படுகிறது என்றுதான் இருக்க வேண்டும் அப்போதுதான் அவர்கள் அந்த முடிவுக்கு வர முடியம். இவர்கள் வேண்டுமென்றே அவர்களுடைய வாதத்தைப் பரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வேளியிட்டுள்ளனர் என்று நாம் குற்றம் சாட்டவில்லை. இது அச்சுக் கோர்ப்பில் விடுபட்டு விட்டது என்றே நல்லெண்ணம் கொள்வோம். இத்தகைய தவறுகள் மானிடர்களுக்கு சகஜம்தான். ஆயினும் இதே விதமான

தவறுகள் ஹதீஸ்களிலும் நடக்க வாய்ப்பு உள்ளது என்றே நாம் கூற வருகிறோம். சரிப்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உள்ள இக்காலத்திலேயே இத்தகைய தவறுகள் நடக்கும் வாய்ப்பு உள்ள தெனும் போது கைகளால் எழுதப்படும் போதும் இத்தகைய தவறுகநேடக்க ஏராளமான வாப்பாக்கள் உள்ளன அல்லவா அத்தகைய தவறுகளை இப்போது நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? இத்தகைய தவறுகள் மதீஸ்களில் நடந்திருக்க வாய்ப்பே இல்லை என்று எவரேனும் கூற முடியுமா?)

மேற்கண்ட அளவுகோலும் அதனடிப்படையில் செய்யப்பட்ட முடிவும் சரியானதுதான். சந்தேகம் வரும் போது இப்படியெல்லாம் வடிகட்டாவிட்டால் ஹதீஸ்களின் கலப்பற்ற தன்மை (?!) கெட்டுப்போய் விடும்

புதிய நினைவூட்டல் : (இத்தனை கலப்பிற்குப் பின்னும் கலப்பற்ற தன்மை எவவாறு என்ன இருக்க முடியம் வடிகட்டுவதற்கு பல சல்லடைகள் போதாதே முடிக்க நனைந்த பின்னர் முக்காடு பலனளிக்குமாறு?)

இது போன்ற சமயங்களில் இவ்வாறு செய்வதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

புதிய நினைவூட்டல் : (மக்களின் ஈமானைக் கொள்ளைப்பதில் இவர்கள் அனைவரும் கூட்டாளிகள் தான் என்பதற்கு இவர்களின் ஒப்புதல் வாக்குமுலம் இது)

இதெல்லாம் சந்தேகம் வரும்போது தான்.

புதிய நினைவூட்டல்:(ஹதீஸ்களின் மேலும் அவற்றின் அறிப்பாளர்கள் எழுதியவர்கள் பிரசாரம் செப்டவர்கள் அனைவரின் மீதும் சந்தேகம் வந்து விட்டதே. இதை எப்படிச் சரிகட்டப் போகிறார்கள்?)

சந்தேகமே வராத இடங்களில் இந்த அளவுகோலைப் பயன்படுத்தலாமா என்பதுதான் நம் கேள்வி?

புதிய நினைவூட்டல் : (இவர்களுக்கு வேண்டுமானால் இந்த ஹதீஸில் சந்தேகம் இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு வந்த சந்தேகம் தவறு என்று எப்படி இவர்கள் கூறிகிறார்கள் ?)

மேற்கண்ட வாசகம் அபூஹீரைரா கூறியதே. தனது கூற்று அல்ல என்று

தொடர்ச்சி 27ஆம் பக்கம்....

அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

Sura 2: The Heifet (Al-Baqarah)

அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

اَمْ تَقُوْلُوْنَ اِنَّ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطَ كَانُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى قُلْ ءَاَنْتُمْ اَعْلَمُ اَمِ اللّٰهُ وَمَنْ اَظْلَمُ مِمَّنْ كَتَمَ شَهَادَةً عِنْدَهٗ مِنَ اللّٰهِ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ

140. Do you say that Abraham, Ismail, Isaac, Jacob, and the Patriarchs were Jewish or Christian? Say, "Do you know better than God? Who is more evil than one who conceals a testimony he has learned from God? God is never unaware of anything you do."

140.ஆப்ரஹாம், இஸ்மாயில், ஐசக், ஜேகப் மற்றும் அந்த வம்சாவளித் தலைவர்கள், யூதர்களாகவோ அல்லது கிறிஸ்துவர்களாகவோ இருந்தனர் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? கூறுவீராக, கடவுள்-ஐ விடவும் நன்கறிந்தவர்களா நீங்கள் ? கடவுள் - யிடமிருந்து தான் கற்றுக்கொண்ட ஒரு சாட்சிப் பிரமாணத்தை மறைக்கின்ற ஒருவனை விட மிகத் தீயவன் வேறு யார் ? நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் குறித்துக் கடவுள் ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

تِلْكَ اُمَّةٌ قَدْ خَلَتْ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ مَّا كَسَبْتُمْ وَلَا تُسْأَلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ

141. That was a community from the past. They are responsible for what they earned, and you are responsible for what you earned. You are not answerable for anything they did.

141.அது கடந்த காலத்தில் இருந்த ஒரு சமுதாயம். அவர்கள் சம்பாதித்தவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் சம்பாதித்தவற்றுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர்கள். அவர்கள் செய்த எந்த ஒன்றுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டியவர்களாக இல்லை.

*Abolition of Bigotry and Prejudice**

மத. இன. கொள்கை வெறி மற்றும் தவறான அனுமானங்களை நீக்குதல்

سَيَقُوْلُ السُّفَهَآءُ مِنَ النَّاسِ مَا وَلّٰهُمْ عَنْ قِبْلَتِهِمُ الَّتِىْ كَانُوْا عَلَيْهَا ۚ قُلْ لِّلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ۚ يَهْدِىْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

142. The fools among the people would say, "Why did they change the direction of their Qiblah?" Say, "To God belongs the east and the west; He guides whoever wills in a straight path.

142. மனிதர்களுக்கிடையில் உள்ள மூடர்கள் கூறக் கூடும், அவர்களுடைய கிப்லாவின்* திசையை ஏன் அவர்கள் மாற்றினார்கள் ? கூறுவீராக, கிழக்கும் மேற்கும் கடவுள் - க்கே உரியவை; நேரான பாதையை நாடுகின்ற எவரையும் அவர் வழி நடத்துகின்றார்.

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا شُهَدَآءَ عَلَى النَّاسِ وَيَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ۗ وَمَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِىْ كُنْتَ عَلَيْهَآ اِلَّا لِنَعْلَمَ مَنْ يَّتَّبِعُ الرَّسُوْلَ مِمَّنْ يَّنْقَلِبُ عَلٰى عَقِبَيْهِ ۗ وَاِنْ كَانَتْ لَكَبِيْرَةً اِلَّا عَلَى الَّذِيْنَ هَدَى اللّٰهُ ۗ وَمَا كَانَ اللّٰهُ لِيُضِيْعَ اِيْمَانَكُمْ ۗ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِيْمٌ

143. We thus made you an impartial community, that you may serve as witnesses among the people, and the messenger serves as a witness among you. We changed the direction of your original Qiblah only to distinguish those among you who readily follow the messenger from those who would turn back on their heels. It was a difficult test, but not for those who are guided by God. God never puts your worship to waste. God is Compassionate towards the people, Most Merciful.

143. இவ்விதமாக மக்களுக்கிடையில் நீங்கள் சாட்சிகளாகத் திகழ்வதற்காக, உங்களை ஒரு நடுநிலை தவறாத ஒரு சமுதாயமாக நாம் ஆக்கினோம், மேலும் தூதரானவர் உங்களுக்கிடையில் ஒரு சாட்சியாகத் திகழ்கின்றார். உங்களுக்கிடையில் தங்களுடைய குதிங்கால்களின் மேல் பின்னால் திரும்பி விடக் கூடியவர்களிலிருந்து முழுமனத்துடன் தூதரைப் பின்பற்றுபவர்களைப் பிரித்தறிவிப்பதற்காக மட்டுமே உங்களுடைய முதல் கிப்லாவின் திசையை நாம் மாற்றினோம். இது கடினமானதொரு சோதனையாகவே இருந்தது, ஆனால் கடவுள்-ஆல் வழி நடத்தப்பட்டவர்களுக்கு அல்ல. உங்களுடைய வழிபாட்டைக் கடவுள் ஒருபோதும் வீணாக ஆக்கி விடமாட்டார். மனிதர்கள்பால் கடவுள் இரக்கமுள்ளவராக இருக்கின்றார், மிக்க கருணையாளர்

قَدْ نَرٰى تَقَلُّبَ وَجْهِكَ فِى السَّمَآءِ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضٰهَا فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا وُجُوْهَكُمْ شَطْرَهٗ وَاِنَّ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ لَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا يَعْمَلُوْنَ

Qiblah Restored to Mecca

144. We have seen you turning your face about the sky (searching for the right direction). We now assign a Qiblah that is pleasing to you. Henceforth, you shall turn your face towards the Sacred Masjid. Wherever you may be, all of you shall turn your faces towards it. Those who received the previous scripture know that this is the truth from their Lord. God is never unaware of anything they do

மக்கா மறுபடி கிப்லாவாகிறது

144.(சரியான திசையைத் தேடியவாறு) உம்முடைய முகத்தை வானத்தின் பால் திருப்பிக் கொண்டிருப்பவராக உம்மை நாம் கண்டோம். இப்போது நாம் உம்மைத் திருப்தி செய்கின்ற ஒரு கிப்லாவை நிர்ணயிக்கின்றோம். இனிமேல், புனிதப்பள்ளியை நோக்கி நீர் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும். நீங்கள் எங்கிருந்த போதிலும், நீங்கள் அனைவரும் உங்களுடைய முகங்களை அதன் பால் திருப்பிக் கொள்ள வேண்டும். முந்திய வேதத்தைப் பெற்றவர்கள் இது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் என்பதை அறிகின்றனர். அவர்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் கடவுள் ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

وَلَٮِٕنْ اَتَيْتَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ بِكُلِّ اٰيَةٍ مَّا تَبِعُوْا قِبْلَتَكَ وَمَاۤ اَنْتَ بِتَابِعٍ قِبْلَتَهُمْ وَمَا بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ وَلَٮِٕنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ مِّنْ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ اِنَّكَ اِذًا لَّمِنَ الظّٰلِمِيْنَ

145. Even if you show the followers of the scripture every kind of miracle, they will not follow your Qiblah. Nor shall you follow their Qiblah. They do not even follow each others' Qiblah. If you acquiesce to their wishes, after the knowledge that has come to you, you will belong with the transgressors.

145. வேதத்தைப் பின்பற்றுபவர்களிடம் ஒவ்வொரு வகையான அற்புதத்தையும் நீர் காட்டினால் கூட, அவர்கள் உம்முடைய கிப்லாவைப் பின்பற்ற மாட்டார்கள். அன்றி நீரும் அவர்களுடைய கிப்லாவைப் பின்பற்ற வேண்டாம். அவர்கள்கூட ஒருவர் மற்றவரின் கிப்லாவைப் பின்பற்றுவதில்லை. உம்மிடம் வந்திருக்கின்ற அறிவிற்குப் பின்னரும், அவர்களுடைய விருப்பங்களுக்கு நீர் இணங்கினால், நீர் வரம்புமீறுகின்றவர்களுடன் சேர்ந்துவிடுவீர்.

அடிக்குறிப்புகள். :

2:142:-145 கிப்லா' என்பது தொடர்புத் தொழுகை யின் போது ஒருவன் முன்னோக்கி நிற்க வேண்டிய திசை முஹம்மது மக்காவுக்கு பதிலாக ஜெருசலேமை நோக்கி நிற்க வேண்டும் எனும் கட்டளையை ஜிப்ரயீல் வாயிலாக அறிந்து செயல்படுத்திய போது நய வஞ்சகர்கள் வெளிப்படுத்தப்பட்டனர். ஏனெளில் அரபுகள் க அபா தான் தங்களது' கிப்லா வாக இருத்தல் வேண்டும் என்ற விடாபிடியான கொள்கையில் முடிவெடுத்திருந்தினர். ஆகவே நம்பிக்கையாளர்கள் மாத்திரமே தங்களது முடிவைடுத்த தன்மையை மிகைத்து தூதரை உடனே பின் பற்றி கீழ்ப் படிந்தனர்.

22ஆம் பக்க தொடர்ச்சி.......

ஜீஹ்ரி கூறியதாக அபூதாவூதில் இடம் பெற்றதை ஜுன் இதழில் நாம் வெளியிட்டுள்ளோம்.

இப்போது இரண்டில் ஒரு முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும். மேற்கண்ட கூற்றில் ஜீஹ்ரி- பொய்யரா? மெய்யரா?

புதிய நினைவூட்டல் : (நாமும் இப்போது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். இத்தகைய குழப்பங்கள் நிறைந்த ஹதீஸ் தொகுப்புக்களை மார்க்க ஆதாரமாகக் கொள்வது இத்திசாலித்தனமாக அலலது முடத்தனமா ?)

அவர் பொய்யர் என்றால் ஒரு பொய்யரை இவ்வளவு சிறப்பாக ஹதீஸ் கலை மேதைகள் புகழ மாட்டார்கள்.

புதிய நினைவூட்டல் : (அவர் முழுமையான நம்பிக்கைக் குரியவர் என்றால் ஹதீஸ்களில் தன் வார்த்தைகளைத் திணிப்பவர் என்று மற்ற ஹதீஸ் கலை மேதைகள் குற்றம் சாட்டியிருப்பார்களா?)

பொய்யர் என்று புகாரி கருதினால் தனது நூலில் அவரது பல ஹதீஸ்களை பதிவு செய்து இருக்கமாட்டார்கள்.

புதிய நினைவூட்டல் : (ஆனால் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் புகாரியும், அபூதாவூதும் இது ஜீஹரியின் திணிப் போ என்று கூறியதை அவர்கள் ஆதாரமாக வைத்தார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம். அவர்கள் அவ்வாறு கூறியிருந்தும் புகாரியின் பெயரை இவர்கள் வேறு விதத்தில் தங்களுக்கு ஆதாரமாகப் பயன்படுத்துகிறார்கள் என்றால்? இது தகிடுதத்தம், திருகுதாளம் அல்லவா? மேலும் அபூஹீரைராவும், அவ காரியும் கூட பேரும் பொய்யாகளே என்பதை இப்போது நாம் ஆதாரபூர்வமாக அறிந்திருக்கின்றோம்.)

இது ஜீஹ்ரியின் கூற்று என்போர் அனுமானத்தின் அடிப்படையி லேயே கூறுகின்றனர். இது தனது கூற்று அல்ல என்று ஜீஹ்ரி கூறுவது அனுமானமல்ல.

புதிய நினைவூட்டல் : (ஹதீஸ்கள் நபியின் கூற்றுக்கள் என்போர் அனுமானத்தின் அடிப்படையி லேயே கூறுகிறார்கள் குர்ஆன் மனிதர்களுடைய கூற்றல்ல இறைவனுடையதே என்பது அனுமானம் அல்ல.)

இந்த விஷயத்தில் மட்டுமின்றி எந்த விஷயத்திலும் அனுமானத்தின் அடிப்படையில் கூறப்படுவதை விட அனுமானத்திற்கு அப்பாற்பட்ட உறுதியான கூற்றையே ஏற்க வேண்டும்

புதிய நினைவூட்டல் : (இவர் களுடைய வாதப்பிரதி வாதங்களில் நாம் அப்படியே ஏற்றுக் கொண்டு வடமோழிவது இக்கருத்து ஒன்றுதான் அதுதான் இவ்விதழின் கொள்கையும் கூட.)

ஜீஹ்ரியின் இந்தக் கூற்று தங்களுக்குக் கிடைக்காத நிலையில் மற்றவர்கள் அவ்வாறு கூறியிருக்கலாம்.

புதிய நினைவூட்டல் : (மாற்றுக் கருத்துடைய இதழை இவர்கள் இங்கே குறிப்பிடவில்லை. ஜீஹரியைப் பற்றி தவறான விமர்சனம் செய்தவர் களையே கூறுகிறார்கள். ஏன்? இவரைப் பற்றிய குறைபாடுகளைப் பற்றி புகழ்ந்துரைத்தவர்கள் அறியாமலும் இருந்திருக்கலாம் அல்லவா இவ்வாறு கூறுவதால் புகாரியின் மதிப்புக்கோ மற்றவர்களின் மதிப்புக்கோ மாசு ஏற்படாது.

புதிய நினைவூட்டல் : (ஹதீஸ்கள் நபியின் கூற்றுக்கள் அல்ல. இவ்வாறு கூறுவதால் நபிக்கோ நபித்தோழர்கட்கோ மாசு ஏற்படாது.)

இதை விடுத்து 'தனது கூற்று அல்ல' என்ற ஜீஹரியின் கூற்று பொய் என்று கூறினால் ஜீஹ்ரியின் மதிப்புக்கு இழுக்கு, ஒரு பொய்யரைப் புகழ்ந்துரைத் தவர்களின் மதிப்புக்கு இழுக்கு ஒரு பொய்யரின் ஹதீஸை தனது நூலில் பதிவு செய்த புகாரி இமாமுக்கும் இழுக்கு என்பதை மாற்றார்கள் உணர வேண்டும்.

புதிய நினைவூட்டல் : (ஹதீஸ்கள் நபியின் அங்கீகாரம் பெற்றவை அல்ல என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் இல்லையேல் நபித் தோழர்கட்கு இழுக்கு நாற்பெரும் கலீஃபாக்களுக்கு இழுக்கு குர்ஆனைத் தவிர மற்றவற்றையும் பிரசாரம் செய்தார் என்று கூறுவதால் நபியின் மதிப்புக்கும் இழுக்கு இதனை நம் மாற்றார்கள் உணர் வேண்டும். தவிரவும் இவர்கள் இங்கே பகாரியின் மேல் பெருமதிப்பு வைத்திருக்கும் பாமர முஸ்லிம்களின் 'உணர்வை தூண்டுகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்)

பொய் சொல்லக் கூடியவரின் ஹதீஸை புகாரி இமாம் தனது நூலில் பதிவு செய்துள்ளார்கள் என்று கூறி அவர்களை இழிவு செய்யும் போக்கை அவர்கள் கைவிட வேண்டும்.

புதிய நினைவூட்டல் : (ஒரு பொய்மான் புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை யெல்லாம் நபி கூறினார் என்று கூறி நபியை இழிவு செய்யும் - போக்கை இவர்கள் அனைவரும் கைவிட வேண்டும்)

அது அபூ ஹுரைராவின் கூற்றுத்தான் என்று உறுதியாகி விடும் போது இமாம் சப்தமாக ஓதும்போது பின்பற்றுபவர்கள் எதையும் ஓதலாகாது என்பது உறுதி.

புதிய நினைவூட்டல் : (ஹதீஸ்கள் நபியின் அங்கீகாரம் பெற்றவை அல்ல என்று உறுதியாகி விடும்போது நம் நபி தந்த குர்ஆனைத் தவிர வேறு எதையும் பின்பற்றக் கூடாது என்பது உறுதி)

நபித் தோழர்கள் ஆரம்பத்தில் அவ்வாறு ஓதி வந்து நபி கண்டித்த பிறகு விட்டு விட்டார்கள் என்பது உறுதி.

புதிய நினைவூட்டல் : (நபி வாழும் காலத்தில் அவர் கூற்றுக்களை எழுத முற்பட்ட நபித்தோழர்கள் நபி கண்டித்த பிறகு அவ்வாறு செய்வதை விட்டு விட்டனர் என்பதும் உறுதி இத்தகவல் அவர்கள் நம்பும் ஹதீஸ்களில் பதியப்பட்டு உள்ளது என்பதும் உறுதி)

திருக்குர்ஆனுடன் ஒத்துப் போவதாலும்

புதிய நினைவூட்டல் : (உணவுக்கு ஊறுகாய் போல இவர்கள் தீர்ப்புகளுக்குக் குர்ஆனைப் பயன்படுத்துவதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். முஸ்லிமில் இடம் பெறும் ஹதீஸுக்குப் பொருத்தமாக இருப்பதாலும் இதுவே செயல்படுத்தத்தக்கது. என்பதில் ஐயமில்லை.

புதிய நினைவூட்டல் : (திருக்குர்ஆனுடன் ஒத்துப் போவதாலும் தன்னிடமிருந்து குர்ஆனைத் தவிர வேறு எதையும் எழுதக்கூடாது என்ற உத்தரவு ஹத்ஸ்களில் காணப்படுவதாலும் குர்அன் மட்டுமே மார்க்க ஆதாரமாகக் கோள்ளத் தக்கது என்பதில் ஐயமில்லை. இத்துடன் இவ்விஷயம் குறித்த அவர்களுடைய வாதங்கள் முடிந்து விடவில்லை,

வளரும் இன்ஷா அல்லாஹ் என்று முடித்திருக்கின்றனர் எத்தனை மாதங்கள் வளர்த்தார்களோ நாம் அறிய மாட்டோம். ஆனால் ஒரு முடிவுக்கு வந்திருக்க மாட்டார்கள் என்பது மட்டும் மிகவும் நிச்சயம் இதுதான் ஹதீஸ்களைப் பற்றியும், அவற்றின் அறிவிப்பாளர்களின் வரிசையைப் பற்றியும், அவை தரம் பிரிக்கப்படும் விதத்தைப் பற்றியும் உள்ள உண்மை நிலை.

"இறைவன் நீதமாகத் தான்பளிப்பார் அதே சமயம் அவரையன்றி அவர்கள் அழைக்கும்) மற்ற இணையாளர்கள் எதையும் தீர்ப்பளிக்க முடியாது. இறைவன் பார்க்கக் கூடிய இராகவும் கேட்க்க கூடியவராகவும் இருக்கின்றார். (4020)

ஹதீஸ்கள்
நபியின் அங்கீகாரம்
பெற்றவை அல்ல என்பதை
அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.
இல்லையேல் நபித் தோழர்கட்கு இழுக்கு,
நாற்பெரும் கலீஃபாக்களுக்கு இழுக்கு.
குர்ஆனைத் தவிர மற்றவற்றையும்
பிரசாரம் செய்தார் என்று கூறுவதால்
நபியின் மதிப்புக்கும் இழுக்கு.
இதனை நம் மாற்றார்கள்
உணர வேண்டும்.

இயேசு கிறிஸ்து (ஈசா)

(ரஷாத் கலீஃபாவின் குர்ஆன் மொழிபெயர்ப்பின் அனுபந்தம் 22லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

இயேசு, கடவுளால் மனிதர்களுக்குத் தூதராக அனுப்பப்பட்ட ஒரு மனிதரே என்று குர்ஆன் நமக்கு அறிவிக்கிறது; அவருடைய ஒரே இறைப்பணி மனிதர்களுக்கு இறைவனின் செய்திகளைச் சேர்ப்பிப்பது மட்டுமே. அவர் சுயமாக எந்தச் சக்தியும் கொண்டவர் அல்ல, மேலும் இப்போது அவர் இறந்துவிட்ட மனிதர்களில் ஒருவர் ஆவார் (4:171, 5:75, 117) இயேசுவைக் கடவுள் என்றோ, கடவுளின் மகன் என்றோ, திரித்துவத்தில் ஒருவர் என்றோ கருதுபவர்கள் இறை நம்பிக்கையற்றவர்களே (5:17, 72, 73) மிகச் சிறந்த கிறித்துவ அறிஞர்களும் இப்போது மேற்கண்ட முடிவுக்கு வந்து விட்டனர்.

(The Myth of God Incarnate, Jhon Hick, ed., The west minis ter Press, Philadelphia, 1977 & The Myth Maker., Hyam Maccoby, Harper & Row 1986) இன்றைய கிறித்துவம் நைசீன் மாநாட்டின் உற்பத்தியே ஆகும்.

பைபிளில் இயேசு

இயேசு உரக்கப் பிரகடனம் செய்தார்: என்னை நம்புபவர், கடவுளை நம்புவது போல் என்மேல் அதிகமான நம்பிக்கை கொள்ள மாட்டார், ஏனெனில் நான் சுயமாகப் பேசவில்லை. என்னை அனுப்பிய பிதாவானவர் நான் என்ன கூறவேண்டுமென்றும் எப்படிக் கூற வேண்டு மென்றும் கட்டளை யிடுகிறார்.

அவருடைய கட்டளைகள் நித்திய வாழ்வைக் குறிப்பவை என்று நான் அறிந்திருப்பதால், நான் என்ன கூறினாலும் அது அவர் எனக்குக் கட்டளையிட்டபடியேதான் (ஜான் 12:44-50)

நான் சுயமாக எதையும் செய்ய இயலாது. நான் கேட்டவற்றை வைத்தே நான் தீர்ப்பளிக்கின்றேன், மேலும் என்னுடைய தீர்ப்பு நேர்மையானதே, ஏனெனில் நான் என் விருப்பத்தின்படி செய்வதில்லை,

ஆனால் என்னை அனுப்பியவரின் விருப்பத்தின் படியே நான் செய்கிறேன். (ஜான் 5:30)

இயேசு கூறினார், "என்னுடைய கொள்கை எனக்குச் சொந்தமானதல்ல, அது என்னை அனுப்பிய வருடையதே" (ஜான் 7:16)

இஸ்ரவேலர்களே, எனக்குச் செவிசாயுங்கள்! நாஸரேத்தின் இயேசு, இறைவனால் அற்புதங்களுடன்அதிசயங்களுடன், அத்தாட்சிகளுடன் உங்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு மனிதனே. நீங்கள் நன்கறிந்துள்ளபடி இறைவனே. அவற்றை அவர் மூலம் மக்கள் மத்தியில் நடத்திக் காட்டினார். (Acts 2 : 22)

.... என் வார்த்தையைச் செவியேற்று, என்னை அனுப்பியவரின் மேல் நம்பிக்கை கொள்பவன் நித்திய வாழ்வை உடையவன் ஆவான். (ஜான் 5:24)

"எவர் என்னை வரவேற்கின்றாரோ அவர் என்னை அல்ல, என்னை அனுப்பியவரையே வரவேற்கின்றர்" (Mathew 10:40, Mark9:37, Luke 9:48, & Jhon 13:20)

நான் சுயமாக வரவில்லை. அனுப்பும் உரிமை உள்ளவரால் நான் அனுப்பப்பட்டுள்ளேன், அவரை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவரிடமிருந்து வருவதால் நான் அவரை அறிவேன். அவரே என்னை அனுப்பினார். (Jhon 7:28-29)

இறைவனின் ஆன்மாவினால் (ஆவியினால்)வழிநடத்தப்படுவோர் அனைவரும் அவருடைய பிள்ளைகளேயாவர் (Romans 8:14)

இயேசு மேலே நோக்கியவாறு கூறினார். பிதாவே, என்னைச் செவியேற்றதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் எப்போதும் என்னைச் செவியேற்பவராக இருக்கின்றீர் என்பதை நான் அறிவேன், ஆயினும் இந்தக் கூட்டத்தார் நீர்தான் என்னை அனுப்பினீர் என்பதை நம்பக் கூடும் என்பதற்காகவே நான் இதைக் கூறுகிறேன். (Jhon 11:41-42)

அவர் ஒரு பிரயாணத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது ஒரு மனிதன் ஓடிவந்து அவர் முன் மண்டியிட்டு அவரிடம் கேட்டான் "நல்ல மேய்ப்பரே, நித்திய வாழ்வில் பங்குபெற நான் என்ன செய்ய வேண்டும்?" இயேசு பதிலளித்தார், "ஏன் என்னை நல்லவரே என்று அழைக்கின்றீர்?, கடவுளைத் தவிர வேறு யாரும் நல்லவர் இல்லை." (Mark 10:17-18)

என்னை இரட்சகரே என்றழைக்கும்எவனும்இறைவனின்

சாம்ராஜ்யத்திற்குள் நுழைய மாட்டான். ஆனால் பரலோகத்தில் இருக்கும் என் பிதாவின் சித்தப்படி நடப்பவன் நுழைவான் (Mathew 7:21)

.... என் சகோதரர்களிடம் சென்று கூறுங்கள் நான் என்னுடைய பிதாவும் உங்களுடைய பிதாவும் என்னுடைய கடவுளும் உங்களுடைய கடவுளுமான அவரிடம் ஏறிச் செல்கின்றேன் (Jhon 20:17)

"கடவுள் தான் என்னுடைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகரும் ஆவார். அவரை மட்டுமே நீங்கள் வணங்க வேண்டும். இதுவே நேரான பாதையாகும். (குர்ஆ ன் 3:51, 19:36, 43:64)

கிறித்துவர்களால் கற்பிக்கப்படும் திரித்துவம் கடவுள் சாரத்தில் ஒன்றானவர் என்றாலும் நபர்களாக பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்ற மூவர் என்று கூறுகிறது. திரித்துவம் என்ற வார்த்தையோ அந்தக் கொள்கையோ புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. மேலும் இயேசுவும் அவருடைய சீடர்களும் பழைய ஏற்பாட்டில் உள்ள கீழ்கண்ட கட்டளைக்கு முரண்படும் எண்ணமும் கொண்டிருக்கவில்லை. "கேளுங்கள், இஸ்ரவேலரே: நம் கடவுளான இரட்சகர் ஒருவரே ஆவார்." (Deut 6:4) (Encyclope dia Britannica 1975)

இயேசுவின் மரணம்

இதுவே இவ்வுலகில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு விஷயமாக இருந்து வந்துள்ளது. குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீடு, இவ்விஷயத்தில் இறுதியான விடையை இப்போது வழங்கியுள்ளது.

இயேசுவின் ஆன்மா உயர்த்தப்பட்டது, அதாவது, அவர் கைது செய்யப்பட்டுச் சிலுவையில் அறையப்படும் முன்னர் அவர் மரணத்தில் ஆழ்த்தப்பட்டார். இவ்விதமாக, இறந்து விட்ட அவருடைய உடலைத்தான் கைது செய்து, கொடுமைப்படுத்தி, சிலுவையில் அறைந்தனர் - அதற்கு முன்னமே இயேசு ஆன்மலோகத்திற்குச் சென்று விட்டார் (3:55, 4:157)

அவர்கள் திட்டமிட்டனர், மேலும் சூழ்ச்சிகள் செய்தனர், இறைவனும் அவ்வாறே செய்தார்; இறைவன் மிகச் சிறந்த திட்டமிடுபவர். இறைவன் கூறினார், “இயேசுவே நான் உம்மை மரணத்தில் ஆழ்த்தி என்னிடம் , உயர்த்திக் கொள்வேன்; நம்பிக்கையற்றோரிடம் இருந்து நான் உம்மைக் காப்பேன்." (அல்குர்ஆன் 3:54-55)

அவர்கள் இறைத்தூதரான மெசையா, மேரியின் மகன் இயேசுவைக் கொன்று விட்டதாகக் கூறுகின்றனர். உண்மையில் அவர்கள் அவரைக் கொல்லவேயில்லை, அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லவும் இல்லை. அவர்கள் அவ்வாறு செய்ததாக எண்ணிக் கொள்ளும்படி வழிசெலுத் தப்பட்டனர். (குர்ஆன் 4:157)

கருணையுள்ள இறைவன் ஒரு மனிதரின் ஆன்மா இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்ட பிறகும் அவருடைய உடல் 19 மாதங்கள் வரை உயிருடன் இருந்த ஒரு வாழும் உதாரணத்தை நமக்காக நம் தலை முறையினருக்கு அளித்துள்ளார். 1984, நவம்பர் 25 அன்று அமெரிக்காவின் கென்டக்கியில் உள்ள Humana Hospital of Louisville என்ற மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் வில்லியம் ஷ்ராடர் என்பவருடைய நோயுற்ற இருதயத்தை நீக்கிவிட்டு அதற்குப் ப்ளாஸ்டிக்கிலும் உலோகத்திலும ஒரு (Pump) குழாயை வைத்து அவருக்கு (Operation) அறுவை சிகிச்சை செய்தனர் (The New York Times, Monday Nov 26, 1984)

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ன் ஆப்ரேஷனுக்கு 19 நாட்கள் கழித்து வில்லியம் ஷ்ராடர், அவர் ஆன்மா, உண்மையான ஷ்ராடர் இவ்வுலகை விட்டு நீங்கினார். ஷ்ராடர் இறந்து விட்டார். ஆயினும் அவருடைய உடல் வைக்கப்பட்டிருந்த Pump மூலம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தது. அவருக்கு வாதம் (Stroke) ஏற்பட்டிருக்கலாம் என்று உலகுக்குச் சொல்லப்பட்டது. (The New York Times, December 14, 1984 குறிப்பிடத்தக்க விதமாக, ஷ்ராடர் அவருடைய இறப்புக்கு ஒருநாள் முன்னர் அமெரிக்காவின் தேசியத் தொலைக்காட்சியில் அன்றைய ஜனாதிபதி ரொனால்ட் ரீகனுடன் பேசினார். அப்போது அவர், அமெரிக்காவின் சமூகப் பாதுகாப்பு அமைப்பிலிருந்து தனக்கு வரவேண்டிய பாக்கித் தொகையையும் கேட்டார். அப்போது அவர் முற்றிலும் உஷாராக இருந்தார். ஆனால் அவருக்கு வாதம் ஏற்பட்ட பிறகு காலத்தையோ, நேரத்தையோ, அவருடைய குடும்பத்தாரையோ அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் ஷ்ராடர் இவ்வுலகத்தில் அப்போது இல்லை.

மருத்துவ தகவல் :

மனிதனின் உண்மையான மரணம்

மரணம் என்பது ஒரு நொடியில் நடந்து முடிகிற ஒரு சம்பவமல்ல.

முழுமையான மரணம் என்பது உடலின் ஒவ்வொர் அணுவும் இறந்து போகும் நிலை. இதற்கு 'டிஷ்யூ டெத் (Tissue Death)' அல்லது 'செல்லுலர் டெத் (Cellular Death)' என்று பெயர்.

உடலின் இயக்கங்கள் ஒவ்வொன்றாகத்தான் செயலிழக்கும்.
வெளிப்படையாகத் தெரிவது, சுவாசம் நின்றுபோதல். முன்பெல்லாம் நாடித்துடிப்பு நின்று போவதையே மரணம் என்றார்கள். நாடித்துடிப்பும் மூச்சும் நின்று போவதை மருத்துவ பாஷையில் 'கார்டியாக் டெத் (Cardiac Death)' என்கிறோம்.

இதேபோல், மூளை செயலிழந்து போகும் நிலைக்குத்தான் 'ப்ரெய்ன் டேத்' என்று பெயர். இதயத்துடிப்பு நின்றபிறகு கூட மூளையின் இயக்கம் தொடரலாம். மூளை முழுக்க முழுக்க இறந்தபிறகும் கூட, இதயம் துடித்துக் கொண்டிருக்கலாம். இதயத்துடிப்பு இருந்தாலும், மூளையின் இயக்கம் இல்லையென்றால் வாழ்க்கை முடிந்து விட்டது என்றுதான் பொருள்.

நன்றி : உச்சி முதல் உள்ளங்கால் வரை
விகடன் பிரசுரம்

காஸ்பல்ஸ் எனப்படும் புதிய ஏற்பாட்டில் இயேசு கைது செய்யப்பட்ட பின்னர் அவருடைய உடல் அதனைச் சூழ நடந்த விஷயங்களை உணர்ந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகக் கூறப்படுகிறது.

அதே சமயம் தலைமைப் பாதிரிகள் இயேசுவின் மேல் ஏராளமான குற்றச் சாட்டுக்களைக் கொண்டு வந்தனர். பைலேட் அவரிடம் மீண்டும் விசாரணை செய்தார், “உம்மிடம் ஏதேனும் பதில் இருக்கின்றதா? பாரும்; உமக்கெதிராக எத்தனை குற்றச்சாட்டுக்களை அவர்கள் கூறுகிறார்கள்”, ஆனால் இயேசு எந்தவிதமான பிரதிபலிப்பும் காட்டவில்லை . (Mark 15:3-5)

இயேசுவைப் பார்த்து ஹிரோட் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவரைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து, மிக நீண்ட காலமாக, அவரைப் பார்க்க வேண்டும் என்று அவன் விரும்பினான். மேலும் அவர் சிற அற்புதங்களை செய்வார் என்றும் அவன் எதிர்பார்த்தான். அவன் இயேசுவை ஏராளமான கேள்விகள் கேட்டான். ஆனால் இயேசு எதையும் பிரதிபலிக்கவில்லை , எந்த உணர்வையும் வெளிக்காட்ட வில்லை. தலைமைப் பாதிரிகளும், மத ஊழியர்களும் அவரைக் கடுமையாகத் திட்டினார்கள். பின்னர் ஹிரோடும் அவனுடைய சேவகர்களும் அவரை மிகவும் வெறுப்புடனும், இழிவாகவும் நடத்தினர் (Luk 23:8-11)

மீட்பர் என்னிடம் கூறினார், யாரை நீர் மரத்தில் மகிழ்ச்சியுடனும் சிரித்தவாறும் கண்டீரோ அவர்தான் உயிருள்ள இயேசு. அவர்கள், எதனுடைய கால்களிலும், கரங்களிலும் ஆணிகளை அறைகிறார்களோ அது மாமிசமே ஆகும் (Apocalypse of Peter, VII, 3,81 from NAG Hammadi Library - Harper & row, 1977, James M. Robinson, ed, Page 339)

ஆக. ஷ்ராடர் அவருடைய ஆப்பரேஷனுக்குப் பிறகு 19 நாட்கள் உயிர் வாழ்ந்தார் என்பதும் அதன் பின்னர் 19 மாதங்கள் வரை அவருடைய உடல் இயங்கிக் கொண்டிருந்தது என்பதும் இறைவனின் விசித்திரமான நினைவூட்டல்களாகும். இதன் மூலம் இயேசுவின் கைதுக்கு, அவர் கொடுமைப்படுத்தப் படுவதற்கு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் அவர் ஆன்மா இவ்வுலகை விட்டு உயர்த்தப்பட்டது என்ற நிரூபிக்கப்பட்ட உண்மை நிலைக்கும் ஷ்ராடரின் நிலைக்கும் உள்ள தொடர்பை உலகம் அறிந்து கொள்ள இறைவன் நாடியுள்ளார்.

சோதனை

"நம்பிக்கை கொண்டு விட்டோம் " என்பதனால் எவ்வித சோதனைக்கும் உட்படுத்தப்பட மாட்டோம் என . இம்மக்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்களா?"

"நம்பிக்கையாளர்கள் இவ் வுலகிலும், மறுமை நாளிலும் வெற்றியை அடைவார்கள் எனவும் 2:62, 5:69 மேலும் அதே சமயம் நம்பிக்கையாளர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் குர்ஆன் நமக்கு கற்பிக்கிறது.

29:2,3

அவர்களுக்கு பிருந்தவர்களும் நம்மால் சோதிக்கப்பட்டார்கள் எவர் உண்மையாளர் மேலும் எவர் பொய்யர் என்பதை வேறுபடுத்திக் காட்ட வேண்டி அவர் அவ்வாறு செய்கிறார்.

3:179

நல்லதிலிருந்து கெட்டதை வேறுபடுத்தி காட்டாமல் நம்பிக்கையாளர்களை அவர்கள் இருக்கும் அதே நிலையில் இறைவன் விட்டு விடுவதில்லை.

2:124

உங்களுக்கு முன்பிருந்தோர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது போல் நீங்கள் உட்படுத்தப்படாமல் சொர்க்கம் புகலாம் என எதிர்பார்க்கிறீர்களா?

<u>சோதனை எவ்விதம்</u>

நம்பிக்கையாளர்கள் பற்பல முறைகளில் சோதிக்கப் படுகிறார்கள். அது சிறியதாகவும், லேசானதாகவும் இருக்கலாம். அல்லது கடினமாக, கனமானதாக இருக்கலாம். மேலும் நோய், பயம், பசி, வறுமை, மரணம், அதிகாரம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் இழப்பாகவும் இருக்கலாம்.

போரில் தோல்வி, தேர்வில் தோல்வி, திருமண உறவில் தோல்வி, வியாபாரத்தில் தோல்வி, வேலை அல்லது நண்பனை இழத்தல்..... இன்னபிற..... இவைகள் மிகச் சில உதாரணங்களே. மேலும் சோதனை என்பது அருட்கொடைகளான பொருளாதார வளம், உடல்நலம், அறிவு, குழந்தைகள், குடும்பம், பாதுகாப்பு, அமைதி... இன்னபிற

2:115

பயத்தை கொண்டும், பசியைக் கொண்டும், மேலும் பணம் மற்றும் உயிர் இழப்பைக் கொண்டும், விளைச்சலில் நஷ்டத்தைக் கொண்டும், நிச்சயமாக நாம் உங்களை சோதிப்போம். உறுதியுடன் நிலைத்திருப்பவர்க்கு நற்செய்தி கொடுப்பீராக!

8:28

உங்களின் செல்வமும், பிள்ளைகளும், உங்களுக்கு சோதனை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் இறைவனிடம் மகத்தான கூலி இருக்கின்றது.

3:186

உங்கள் செல்வம் மற்றும் உங்கள் உயிர்களைக் கொண்டு நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். மேலும் வேதத்தை பெற்றவர் களிடமிருந்தும், இணைவைப் பாளர்களிடமிருந்தும் அதிகமான இழிச் சொற்களைக் கேள்வியுறுவீர்கள். நீங்கள் உறுதியுடன் நிலைத்து மேலும் நல்வாழ்வு வாழ்ந்தால், அது உங்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் ஆதாரமாக அமையும்.

யார் சோதிக்கப்படுவார்.

குர்ஆன், அனைத்து நம்பிக்கையாளர்களும் சோதிக்கப் படுவர் என நமக்கு காட்டுகிறது. நபிமார்கள், தூதர்கள், புனிதர்கள், நன்மக்கள் அனைவரும் சோதிக்கப்படுவர்.

47:31

நாம் நிச்சயமாக, உங்களில் போராடுபவர். எவர் மேலும் உறுதிப்பாட்டோடு தொடர்ந்து முயற்ச்சிப்பவர் எவர் என பிரித்தவிக்க வேண்டி சோதனைக்கு உட்படுத்துவோம். உங்களுடைய அசல் தன்மைகளை நாம் வெளிப்படுத்துவோம்!

(இப்ராஹீம் ஒரு நபி இறைவனின் நேசர் என அழைக்கப்பட்டவர் ஒரு கடினமான சோதனைக்குட் படுத்தப்பட்டார்.

2:124

"இப்ராஹீம் அவர்தம் இரட்சகரால் சோதனைக்குட்படுத்தப் பட்டதை (நினைவு கூர்க) சில கட்டளைகள் மூலம் நிச்சயமாக சோதனைக்குட் படுத்தப்பட்டார். அவர் அவற்றை நிறைவேற்றினார்.

37:105-106

கனவை நீர் நம்பிவிட்டீர் நன்மை செய்வோருக்கு இவ்வாறே கூலி கொடுக்கின்றோம். நிச்சயமாக அது கடினமான சோதனை ஆகும்.

38:34

நாம் சுலைமானை சோதனைக் குட்படுத்தினோம், ஏராளமான பொருட் செல்வங்களை நாம் அவருக்கு கொடுத்தோம். ஆனால் அவர் உறுதியுடன் அடிபணிந்தார்.

38:41

நமது அடியார் அய்யூபை நினைவு கூர்க; துன்பத்தையும், வலியையும் கொண்டு சாத்தான் என்னை பிடித்து விட்டான் என்று கூறி அவர் தன் இரட்சகரை அழைத்தார்.

(நம்பிக்கையாளர்களுக்கு சோதனை ; நயவஞ்சகர்களை வெளிப்படுத்தல்)

நம்பிக்கையாளர்களை சோதனை செய்யும் அதே நேரம் இறைவன் நயவஞ்சகர்களை வெளிப் படுத்துகிறார். நிராகரிப்பவர்களை குழப்பத்தில் ஆழ்த்தி அவர்கள் தங்கள் வரம்பு மீறல்களில் குருட்டுத்தனமாக செல்லும்படி விட்டு விடுகிறார். இறைவனின் வழிமுறைகளை அறிந்து கொள்ளாமல் தவறான காரியங்கள் செய்து கொண்டு மிக சரியான காரியங்கள் செய்வதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

துன்பங்களின் போதும், கஷ்டங்களின் போதும் மெய்யான நம்பிக்கையாளர்கள் இறைவனுக்கு அடிபணிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். நாம் உண்மையிலேயே இறைவனுக்கு இன்பத்திலும், துன்பத்திலும் அடிபணிகிறோமா? இல்லையா? என்பதை வெளிப்படுத்தும் முகமாகவே நாம் சோதிக்கப்படுகிறோம்.

இறைவன் இத்தகையோரின் உதாரணத்தை குர்ஆனில் நமக்கு கூறுகிறார். அஹ்ஜாப் படையினரைப் பற்றிக் கூறும் போதும் 33:9-12 ல். மேலும நயவஞ்கர்கள் பற்றி 9:50-51ல்.

2:214

உங்களுக்கு முன்பிருந்தோர் சோதிக்கப்பட்டது போல் சோதிக்கப்படாமல் சுவர்க்கம் நுழைந்து விடலாம் என எதிர்பார்க்கிறீர்களா? அவர்கள் கஷ்டங்களைக்கொண்டும் துன்பங் களைக் கொண்டும் சோதனை

செய்யப்பட்டார்கள். தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும், கடவுளின் வெற்றி எங்கே என்று கேட்கும் வரை அலைக்கழிக்கப்பட்டனர். வெற்றி மிகவும் அருகில் உள்ளது.

33:9-12

"ஓ நம்பிக்கை கொண்டவர்களே, உங்கள் மீது இறைவன் அருளிய அருட்கொடைகள் நினைவு கூருங்கள். உங்களை
படையினர் தாக்கியபொழுது, அவர்களின் மிது கடுங்காற்றையும் மேலும் மறைமுக படையினரையும் அனுப்பிய போது. நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் கடவுள் பார்க்கிறார். உங்கள் மேல் இருந்து அவர்கள் வந்தபொழுது, மேலும் கீழிருந்தும் உங்களின் கண்கள் மிரண்டு விட்டன. உங்கள் இதயங்கள் பொறுமையிழந்து தகாத எண்ணங்களை கொண்டன.

அப்பொழுதுதான் நம்பிக்கை யாளர்கள் உண்மையாகவே சோதிக்கப்பட்டார்கள். அவர்கள் கடுமையாக அலைகழிக்கப் பட்டார்கள்.

நயவஞ்சகர்களும், எவர்களின் இருதயங்களில் சந்தேகங்கள் கொண்டுள்ளனரோ 'அவர்களும் சொல்கின்றனர், இறைவனும், அவர் தூதரும் நமக்கு வாக்களித்திருந்தது ஒன்றுமில்லாத வெறும் கற்பனைகளே!"

<u>உண்மையான நம்பிக்கையாளர்கள் என்ன கூறுவார்கள் :</u>

33:22

உண்மையான நம்பிக்கையாளர்கள் படையினரை கண்ணுற்ற போது (தாக்க முற்படும்போது) அவர்கள் கூறினார், "இதுவே இறைவனும், அவர் தூதரும் நமக்கு வாக்களித்தது. மேலும் இறைவனும், அவர் தூதரும் உண்மையே கூறினார்கள். இது (அபாயகரமான சூழ்நிலை)வே அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தி, மேலும் அடிபணிதலை அதிகப்படுத்திற்று.

இறைவன் தன் புத்தகமான குர்ஆனில் எல்லா பிரச்சனை களுக்கும் தீர்வுகளை தருகிறார். இறைவனுக்கு அடிபணிவது என்பது, இறைவன் நமக்கு எதனையும் கொடுத்தாலோ அல்லது எடுத்தாலோ அதனை அப்படியே ஏற்றுக் கொள்வதாகும். மேலும் பொறுமையுடனும், உறுதியுடனும் இறைவனிடமிருந்து வரும் வெற்றிக்காகவும், உதவிக்காகவும்

காத்திருத்தல் ஆகும். சோதனை நேரும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது நாம் வரிசைப்படுத்துவோம்.

1 துன்பம், கஷ்டம் நேரும்போது நம்பிக்கையாளர்கள் பதறக்கூடாது இறைவன் நம்பிக்கையாளர்களை சோதிக்கத்தான் செய்வார். அவர்கள் தாங்கள் நேரான வழியில் இருக்கிறோமா? இறைவனை மட்டும் ஒருமையுடன் வழிபடுகிறோமா? என்பதை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். தன் பாதையை சீர் செய்து கொண்டு இறைவனுடன் மட்டுமே இருக்க வேண்டும்.

2 இறைவனுக்கு அடிபணிந்து எது நிகழ்ந்தாலும் ஆட்சேபிக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் - 2:155-157.

3 நம்முடைய துன்பத்தையோ, கஷ்டத்தையோ இறைவனிடம் பிரார்த்தித்து சரி செய்து கொள்ள முயல வேண்டும். இறைவன் நாம் அவரை பிரார்த்திக்க வேண்டுமென விரும்புகிறார். இறைவனின் பதிலுக்கு அவசரப்பட வேண்டாம். அவரே அனைத்தையும் நடத்துகிறார்.

4 உறுதியுடன், பொறுமையுடன் நிலைத்திருத்தல் வேண்டும் 2:153, 245, 90:17, 2177, 103:3 மேலும் பல இதுவே நம்பிக்கையாளர்களின் மாபெரும் குணநலன் ஆகும். அவர்களுக்கு மகத்தான கூலியை இறைவன் வாக்களிக்கிறார்.

5 30:47, 30:60, 2:155, 2:214 இறைவனின் வாக்குறுதி உண்மையானது என்றும், நம்பிக்கையாளர்களுக்கு வெற்றி நிச்சயம் என்றும் உறுதியுடன் நம்புங்கள். ஆயினும் நீங்கள் உங்கள் சோதனையில் வெற்றி அடைய வேண்டும். பாதையில் வெற்றி இருக்கிறது. அது அருகிலும் இருக்கிறது.

6 குர்ஆனைப் பொறுத்தவரை இருவிதமான வெற்றிகள் உள்ளன ஒன்று இவ்வுலக வெற்றி. மற்றொன்று அதை விட முக்கியமானதும் மிகப் பெரியதுமான மறுமையின் வெற்றி நம்பிக்கையாளருக்கு இறைவன் இரண்டையும் வாக்களிக்கிறார். நம்பிக்கையாளர்களின் சில வெற்றிகள் மற்றவர்களின் கண்களுக்கு தெரியாமல் மறைந்து இருக்கலாம். மற்ற சில வெற்றிகள் தெளிவாக புலப்படுபவையாக இருக்கலாம். ஒரு உண்மையான நம்பிக்கையாளன் தன் வாழ்வின்

உங்களின் செல்வமும், பிள்ளைகளும், உங்களுக்கு சோதனை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் இறைவனிடம் மகத்தான கூலி இருக்கின்றது.
அல்குர்ஆன் 8:28

மிகப்பெரிய சோதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கும் போது கூட அவனால் பல வெற்றிகளை அடையாளம் கண்டு கொள்ள முடியும். இவ்வுலகின் மிகப்பெரிய வெற்றியானது சரியான பாதையை அடைவதும், இறைவனை மட்டும் ஒருமையுடன் ஏற்றுக் கொள்வதும் ஆகும்.

நம்பிக்கையாளர்கள் சோதனையில் பின்னடைவோ, வெற்றியோ, எது வந்தாலும் ஏற்றுக் கொண்டு எப்பொழுதும் நிரந்தரமான வெற்றியான மறுமை வெற்றிக்காக முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். (9:50-52)

இறைவனின் உதவியாலும் அவர் அளிக்கும் நம்பிக்கையாலும் சோதனைகளில் சிறப்பாக தேறுவார்கள். இறைவனின் வெற்றிக்காக காத்திருப்பார்கள். இறைவனின் வெற்றி அருகில் இருக்கிறது என்றும் அதுவே அவர்களின் கூலி என்றும் அவர்கள் நன்கறிந்திருப்பார்கள்.

எல்லாபுகழும் இறைவனுக்கே!

பொக்கிஷத்தின் வாயில் கததவைத் தட்டாமல்

அழுது கொண்டிருக்கும் மனிதர்கள்

வானம், பூமி, பிரபஞ்சம் இன்னும் அண்ட சராசரங்களும் இறைவனுக்கே சொந்தம். ஜீவராசிகளும், ஜடப் பொருளும் இன்னும் அனைத்தும், படைத்து, ரட்சிக்கின்ற அந்த இறைவனுக்கே சொந்தம்.

விவரிக்க முடியாத எல்லையற்ற இறைவனின் சாம்ராஜ்யத்தில் மனிதர்கள் இறைவனுக்கு ஒரு அற்பமான விஷயம். இந்த மனித வர்க்கத்தின் எந்தத் தேவையும் இறைவனுக்கு இல்லை. இதில் ஆதியிலிருந்து உலகில் வாழ்ந்து மறைந்த ஆதம் முதல் நூஹ், இப்ராஹிம், மூஸா, ஈசா, முஹம்மது போன்ற நபிமார்களின் தேவையோ எந்தவொரு தூதர்களின் மஹான் களின் தேவையோ இறைவனுக்கு அவசியமில்லை.

அந்தந்த காலகட்டத்தில் வாழ்ந்திருந்த வர்களுக்கும் பின்வரும் சமுதாயத் தவருக்கும், இறைச் செய்தியையும், வழிகாட்டலையும் கொடுக்க ஒரு வழி முறையாக இறைவன் இவர்களை மனிதர்களில் இருந்தே தேர்ந்தெடுத்து வாழ வைத்து மரணிக்கச் செய்தார்.

மனிதர்கள் இறைச் செய்தியை பெற்றுக் கொள்வதற்காகவும் அது. முழுவதுமாக இறக்கப்படும் வரையும், மேலும் இறைச் செய்தி இன்னதுதான் என்று அறிந்து நடக்க வேண்டியும், அந்தத் தூதருக்குக் கட்டுப்பட்டுக் கீழ் படிந்தும் நடக்குமாறு தூதரோடு வாழ்ந்த மக்களுக்கு இறைவன் கட்டளையிடுகிறார்.

தூதர் தன்னிச்சையாக தன்னுடைய அறிவாற்றலைக் கொண்டு வழிகாட்டுவதில்லை. தூதுச் செய்தியைக் கொண்டே ஒவ்வொன்றுக்கும் வழிகாட்டுதலை கூறுகிறார். குர்ஆனில் இதற்கு ஏராளமான ஆதார வசனங்கள் உள்ளன. (46:9) தூதர்கள் மரணித்தபின் இறைச் செய்திகள் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு விட்ட நிலையில், அந்தத் தூதரும் மனிதர்களும் தூதுச் செய்திகளுக்குக்

கீழ்ப்டிந்து கட்டுப்பட்டு நடப்பது கடமையாகும்.

தூதர் மரணமடைந்து, தூதர் இல்லாத நிலையில் இறைவனின் தூதுச் செய்தியே தூதராக இருந்து வழிகாட்டியாக செயல்படும். உலக இறுதிநாள் வரை தூதராக இருந்து வழிகாட்டக் கூடியது. இறைச் செய்தியான குர்ஆன் மட்டுமே. 46:12

அப்படியானால் நபிமார்களின் அன்றாட நடைமுறைகள், நல்லடியார்களின் வாழ்க்கை வரலாறு, படிப்பினைகள், போதனைகள், வழிகாட்டுதல்கள், அரசியல் பொருளாதார சீர்திருத்த நெறி முறைகள் அத்தனையும் தேவை யில்லையா? , என்று கேள்வி எழுகிறதல்லவா!

மார்க்கமாக பின்பற்ற மேற்படி எதுவுமே தேவையில்லைதான். இறைச் செய்திகள் மட்டும்தான் மார்க்கம் ஆகும். ஆனால் சரித்திரமாக எடுத்துக் கொள்ள எந்தத் தடையுமில்லை .

இப்படி உறுதிபட எப்படி கூறமுடிகிறதென்றால் எது மார்க்கம் என்று குர்ஆனில் இறைவன் கூறுவதை கவனியுங்களேன்.

அல்குர்ஆர். வசனம்
98:5, 12:40, 30:30

இறைவனுக்கு எவரிடத்தும் எந்தத் தேவையும்இல்லை.ஆனால்மனிதன் தேவையுள்ளவனாக இருக்கிறான். மனிதர்களின் தேவை பற்றிப் பார்ப்போம்.

இவ்வுலக வாழ்க்கையில்
<u>மனிதனுக்குத் தேவை :</u>

- ❑ வாழத் தேவையான வசதி, வாய்ப்புகள்,
- ❑ நோயற்ற உடல்
- ❑ அறிவான மனம்
- ❑ சிந்திக்கும் திறன்
- ❑ சாந்தியும், சமாதானமும் கொண்ட அகமும் புறமும்

மறுமை வாழ்க்கையில்
<u>மனிதனுக்குத் தேவை</u>

- ❑ வேதனையற்ற தங்குமிடம்.
- ❑ நினைத்ததெல்லாம் கிடைக்கக் கூடிய பாக்கியம்.
- ❑ பொருத்தமான துணை.
- ❑ பல்வேறு சுவை கொண்ட உணவு,
- ❑ பசுமையும் நீரோடையும் கொண்டதான தோட்டம்.
- ❑ நல்லவர்களின் கூட்டத்துடன் நமக்கும் ஒரு இடம்.

இவையெல்லாம் கனவா? கற்பனையா? எனக் கேட்கிறீர்களா! உண்மைதான்; இவை ஒவ்வொரு மனிதனின் விருப்பமான கனவு.

ஆசையுடன் அடிக்கடி எண்ணிப் பார்த்து மகிழும் கற்பனை.

நம்புங்கள்! இறைவன் இவற்றைத் தருவதாக வாக்களிக்கிறார். தான் கூறுகிறபடி நடக்கும் மனிதர்களுக்கு இவற்றிற்கு மேலும் கற்பனைக்கு எட்டாத அளவு மகிழ்ச்சியான இவ்வுலக, மறுஉலக வாழ்க்கையை வாக்களிக்கிறார்.

இவை அனைத்தும் கிடைக்க இறைவன் கூறுகிற விதிமுறைகள் மிகச் சுலபமானதுதான். அவரவர் சுமப்பதற்கு மேலாக நாம் சுமை சுமத்த மாட்டோம் என்றும் இறைவன் வாக்களிக்கிறார்.

அவை:

1. இறைவனுக்கு இணை வைத்தல் கூடாது:

எந்த ஒரு மனிதரையும் இபுறாஹிம், ஈசா, மூஸா, முகம்மது போன்ற நபிமார்களைக் கூட, இறைவனின் தன்மையுடன் அதாவது இறைவனுக்கு அடுத்தவர் என்று இணைத்து கூறுவதும், நம்புவதும் இணைவைத்தல் தான். 22:62, 73,74

2 . இறைவன் இறக்கியதைக் கொண்டு மட்டுமே தீர்ப்பளிக்க வேண்டும் :

இறைவன் இறக்கிய பாதுகாக்கப்பட்ட குர்ஆனைக் கொண்டு மட்டுமே எதுவொரு விஷயத்திற்கும் தீர்ப்பளிக்க வேண்டும், என்பதுதானே கருத்து.

இதுவல்லாமல் முரண்பாடு கொண்ட, ஏராளமான பொய்களைக் கொண்டு ஆக்கப்பட்ட பலப்பல ஹதீஸ்கள் இஜ்மஉ, கியாஸ், மதஹபு மற்றும் ஃபிக்ஹு சட்டங்களைக் கொண்டு கூறப்படும் தீர்ப்புகள் இறைவனுக்கு எதிரானவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

3. இறைவன் மீது பொய்யை இட்டுக்கட்டக்கூடாது :

- நபிமார்கள், நல்லடியார்கள் சிபாரிசு செய்வார்கள் என்ற பொய்.
- அத்தகையோர் இறைவனிடம் தங்களை நெருங்க உதவுவார்கள் என்ற பொய்.
- நரகிலிருந்து தங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற பொய்.
- கலிமா சொல்லிவிட்டால், நிச்சயம் நரகமில்லை என்ற பொய்
- இவற்றிற்கெல்லாம் தலையாய பொய்யாக குர்ஆனுக்கு முற்றிலும் முரணான இட்டுக்கட்டிய ஹதீஸ்களும் இறைவனிடமிருந்து வந்த வஹிதான் என்ற பொய்.

இப்படியெல்லாம் இறைவன் குர்ஆனில் கூறாதிருக்கும் போது, இறைவன் கூறியதாக பொய் சொல்வது மாபெரும் குற்றமாகும்.

<u>4. இறைவனை மட்டுமே தனித்து வணங்க வேண்டும். 46:13</u>

- ❑ வணக்கம் என்றால் கீழ்படிதல், பணிந்து நடத்தல் என்பதாகும். அந்த அடிப்படையில், இறைவன் கூறியது மட்டுமே ஹலால் ஹராம்

- ❑ இறைவனை மட்டும் தொழுகையில் நினைவு கூறி தொழுவது.

- ❑ இறைச்செய்தியான குர்ஆனை மட்டும் வழிகாட்டலுக்கும் வாழ்க்கைக்கும் ஏற்று நடப்பது.

- ❑ ஆக மொத்தத்தில் குர்ஆனை மட்டும் பற்றி பிடித்தால் ஈருலக அழகிய வாழ்க்கைக்கும் இறைவனின் வாக்குறுதி நமக்குக் கிடைக்கிறது.

- ❑ நன்றாக சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய எளிய இறை வழிகாட்டுதலை உங்களிடத்தே வைத்துக் கொண்டு ஏன் அலை பாய்கிறீர்கள். ஏன் வாழ்க்கையை சந்தேகத் திலேயே கழிக்கிறீர்கள்.

1. தொழுகையின் இருப்பில் விரலை நீட்டுவதா ஆட்டுவதா?

●○●

2.ஃபாத்திஹா,மல்லூது,ஸலவாத்து, சரிவரச் செய்தோமா?

●○●

3. பாய் அறுத்தஇறைச்சியா,காஃபிர் அறுத்ததா?

●○●

4. சுன்னத் இரண்டு ரக்காத்தா, நான்கு ரக்காத்தா, கடமையா? விட்டால் குற்றமா?

●○●

5. தாடியை வைப்பதா, மீசையை சிறைப்பதா, தலையை மழிப்பதா?

●○●

6. ஒரு வேளை நீரால் நன்றாக நனையாமல் ஒலு கூடாதோ? கூடுமோ ?

●○●

7. தொப்பி போடலாமா, வேண்டாமா? குற்றமா?

●○●

8. வட்டி வாங்குவதும், கொடுப்பதும் ஹராம். நகைக்கடன் வங்கியில் கடன் வாங்குவதில் கொடுக்கும் வட்டி ஹராமா? இல்லையா?

●○●

9. நோன்பு பிறை இன்றா? நாளையா? நாளை மறுநாளா?

●○●

10. நபிமார்கள் அவுலியாக்களின் சரித்திரம் படிப்பது கடமையா புண்ணியமா?

●○●

11. குர்ஆனை முத்தமிட்டால், விரல் வைத்தால், புரியாமல் படித்தாலும் நன்மையா? இல்லையா?

●○●

12. எந்த நபியை, அவுலியாவை, மஹானை உதவிக்கு அழைப்பது, மறுமையில் நமக்கு யார் சிபாரிசு செய்வார்கள்?

●○●

13. இசை கேட்பது ஹராமா இல்லையா? இஸ்லாமிய பாடலும், இசையும் கேட்காதவர் உண்டா?

●○●

14. ஷாஃபிகள் செய்வதா, ஹனபிகள் செய்வதா, யார் சரி?

●○●

இப்படி இன்னும் பலப்பல சந்தேகங்கள், குற்ற உணர்ச்சிகள் வாழ்க்கை முழுவதும் மனிதர்களை ஆட்டிப் படைக்கின்றன. இப்படிப் பட்ட குற்ற உணர்ச்சிகளை தோற்றுவித்து அதை மார்க்கம் என்று சத்தியம் செய்யும் அதே ஆலிம்களிடம், இதையே பயன்படுத்தி வயிறு வளர்க்கும் அதே ஆலிம்களிடம் சென்று மனிதர்கள் விளக்கம் கேட்கிறார்கள்.

கையில் இறைவேதமான குர்ஆனை வைத்துக் கொண்டு அதைத் திறந்து, புரிந்த மொழியில் படித்து, விளக்கம் பெறாமல் தடுமாறுகிறார்கள்.

இது எப்படி இருக்கிறதென்றால் பொக்கிஷங்கள் கொட்டிக்கிடக்கும் அறையின் வாயிலில் இருக்கும், தட்டினால் திறந்து விடும் நிலையில் உள்ள கதவைத் தட்டாமல் வாசலில் நின்று கொண்டு வழியறியாது அழுதவண்ணம் இருப்பவர்களைப் போன்றிருக்கிறது.

அனைவரின் அனைத்துத் தேவைகளுக்கும் இறைவன் ஒருவரே போதுமானவர் என்றிருக்கையில்) உங்களைப் போன்ற மனிதர்களை மரித்துவிட்ட நல்ல மனிதர்களை ஏன் உதவிக்கு அழைக்கிறீர்கள். இறைவனுக்கு அடுத்தவர்கள் என்றும், நெருக்கமானவர்கள் என்றும், இரக்கம் காட்டுவார்கள் என்றும் நரகிலிருந்து காப்பாற்றுவார்கள் என்றும் ஏன் இல்லாத ஒன்றை நம்புகிறீர்கள் (46:5)

எத்தகைய தவறுக்கும் இவ்வுலகில் இறைவனிடம் வருந்தி மன்னிப்புக் கோரி, மீண்டும் தவறை செய்யாதிருந்தால் இறைவன் நிச்சயம் மன்னிப்பதாக (3:89) வாக்களிக்கிறார்.

அதை விடுத்து "பொய் கற்பனை செய்யும் பாவிகளுக்கு கேடுதான்"

அத்தகையவர்களைப் பற்றி குர்ஆன் வசனம் 57:14, 15ல் கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்.

57:14

இவர்கள் "நாங்கள் உங்களுடன் இருக்க வில்லையா?" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள்; "மெய்தான்; எனினும் நீங்களே உங்கள்! ஆத்மாக்களைச் சோதனையிலாழ்த்தி கொண்டீர்கள்; நீங்கள் தயக்கம் காட்டினீர்கள் ; சந்தேகமும் கொண்டிருந்தீர்கள்; அல்லாஹ்வின் கட்டளை வரும் வரையில் (உங்களுடைய) வீண் ஆசைகள் உங்களை மயக்கி விட்டன; அன்றியும் அந்த மாயையினால் நீங்கள் இறைவனை விட்டும் திசை திருப்பப் பட்டீர்கள் என்று கூறுவார்கள்.

57:15

"ஆகவே, இன்று உங்களிடமிருந்தோ நிராகரித்தவர் களிடமிருந்தோ (உங்களுக்குரிய வேதனைக்குப் பதிலாக) எந்த வகையான நஷ்ட ஈடும் வாங்கப்பட மாட்டாது; உங்களுடைய தங்குமிடம் நரகம்தான்; அதுதான் உங்களுக்குத் துணை - அதுவோ சென்றடையும் இடங்களிலெல்லாம் மிகக் கெட்டதாகும்'

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

19 கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

If undelivered Please return to

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662